# “வேலைக்கு செல்பவர்களை தடுப்போரை கைது செய்ய வேண்டும்”

Registeredas a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு
சந்தா
தினப்பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 237
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் புரட்டாதி 21 றஜப் 24 செவ்வாய்க்கிழமை [7-10-69]

## ஐ. ஜி. பி. உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்வாய் வேலைக்குச் செல்லும் ஊழியர்களை செல்லவிடாது தடுப்பவர்களை உடன் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன வட பகுதி பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவைத் தொடர்ந்து இங்குள்ள சகல பொலிசாரும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

பெற்றோலியம் கூட்டுத் தாபனம், கடற்றொழில் கூட்டுஸ்தாபனம் ஆகியவற்றின் வேலைநிறுத்தம் யாழ்ப்பாணத்திலும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

சில ஊழியர்கள் வேலைக்குச் செல்ல விருப்பமாகவிருக்கின்றபோதும் மற்ற ஊழியர்கள் சிலர் இவர்களை மறிப்பதாகக் கிடைத்த சில தகவல்களைத் தொடர்ந்தே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்படியான சம்பவம் இங்கு நடைபெற்றால் உடன் அருகிலுள்ள பொலிஸ்நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸ் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (கா. நி.)

தேசிய இளைஞர் சேவை பேரவை

# முதலாவது வேலைத் திட்டம் குருநகரில் 29-ல் ஆரம்பம்

## ராஜாங்க மந்திரி கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம்,செவ்

**தேசிய இளைஞர் சேவைப் பேரவையின் முதலாவது வேலைத் திட்டம் இம்மாதம் 29-ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள குருநகரில் ஆரம்பமாகவிருக்கின்றது. இவ்வேலைத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்க ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது அமைச்சைசசேர்ந்த அதிகாரிகளுடன் 29-திகதி காலை யாழ்ப்பாணம் வருகின்றார்.**

இத் தகவல் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ் தலைமையில் நடந்த கூட்டத்தின் பின்னரே இது அறிவிக்கப்பட்டது.

குருநகர் மீன்பிடித் துறைமுகத்தின் சுமார் இரண்டு மைல்கடல்பரப்புஇச்சேவையின் மூலம் இளைஞர்களால் செய்து முடிக்கப்படும்.வடக் குருநகர் கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 50 வாலிபர்களும வண்ணார் பண்ணை தென் மேற்கு (கொட்டடி) கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 25 வாலிபர்களும் கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 25 வாலிபர்களும் இச்சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இதற்கான விண்ணப்ப பத்திரங்கள் இம் மூன்று ... களின் புகைப்படங்கள் இம்மாதம் 15ம் திகதி எடுக்கப்பட்டு 19-ம் திகதி அடையாள அட்டையும் சேமிப்பு வங்கிப் புத்தகமும் கொடுக்கப்படும். நாள் ஒன்றுக்குசம்பளமாக 3 ரூபா வழங்கப்படும். இதில் தினசரி ஒரு ரூபா வீதம் இவர்களின் சேமிப்பு வங்கியில் வைக்கப்படும் வாராவாரம் சம்பளம் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது வேலைத் திட்டம்

## இரவு 10 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கி பாவிக்க தடை

யாழ்ப்பாணம், செவ்.

திருமண வைபவம் தவிர வேறெந்த பொது நிகழ்ச்சிக்கும் இரவு 10 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கி பாவிக்க கண்டிப்பாக அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் இது விஷயத்தில் பொலிசார் கூடும் கண்காணிப்புச் செலுத்துவார்கள் என்றும் ஒலிபெருக்கி வாடகைக்கு விடும் அனைவருக்கும் வட பகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றையும் பொலிஸ் சுப்பிரிண்டன் வட பகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்இன்ஸ்பெக்டர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

திருமண முகூர்த்தமிருந்தால் மட்டுமே இரவு 10 மணிக்குப்பின் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்க வேண்டுமென்றும் மற்றெந்த நிகழ்ச்சிகளுக்கும் வழங்கக் கூடாது என்றும் இந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்காவது இரவு 10 மணிக்குப் பின்னர் பாவிக்கப்படுவதாக பொலிசுக்குப் புகார் கிடைத்தால் பொலிசார் உடனடியாக விரைந்து சென்று ஒலி பெருக்கி உபகரணங்களை எடுத்துச் சென்று, அதன் சொந்தகாரர் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பொலிஸ் சுப்பிரிண்டன் அறிவித்துள்ளார். (கா. நி)

பட்டதாரிகள் ஆசிரியர் சங்கம்

## சம்பள நிர்ணய சபையை

## நாய்களுக்கு நஞ்சூட்டியபின் வீட்டில் திருடினராம்

### துன்னாலையில் சம்பவம்

பருத்தித்துறை, திங்கள் வீட்டில் நின்ற இரு நாய்களுக்கும் நஞ்சு கலந்த உணவைக் கொடுத்துவிட்டு இரு மூடை நெல்லையும் பெறுமதியான துணிகளையும் திருடிய சம்பவம் துன்னாலை தெற்கைச் சேர்ந்த திரு. வீ. கிருஷ்ணபிள்ளை வீட்டில் நடைபெற்றது.

அடுத்த நாள் காலை நச்சுத்திராவகம் கலக்கப்பட்ட மிகுதி உணவை உண்ட ஆறு கோழிகளும் இறந்தன. பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## ‘கிராமசேவகர் நியமிக்கவும்’

உடும்பராய், செவ்.

உடும்பராய்ப் பகுதிக்கு ஒரு நிரந்தர கிராமசேவகரை கூடிய விரைவில் நியமித்துத் தரும்படி கோரி, உடும்பராய் தமிழரசுவாலிப முன்னணிச் செயலாளர் திரு. ந. அரியரத்தினம்கோப்பாய் எம். பி. திரு கதிரவேலுப்பிள்ளை மூலமாக யாழ். அரசாங்க அதிபருக்கு ஒரு மகஜரை அனுப்பியுள்ளார்.

“உடும்பராய்ப் பகுதிக்கான முந்திய கிராம சேவகர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊரெழுப்பகுதிக் கிராமசேவகர் இப்போது இரு இடங்களையும் கவனித்து வருகிறார் இதனால் உடும்பராய்ப் பகுதி மக்கள் கிராமசேவகரைச் சந்திக்க ஊரெழுவுக்குச் செல்லும் கஷ்டநிலை யேற்படுகிறது.

வெள்ள நிவாரண உதவிப் பணமாக உரும்பராய்ப் பகுதியில் வீடிழந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தில் இன்னும் பாதிப் பணம் அவர்களுக்கு கிடைக்கப்பெறாதது வருத்தத்துக்குரியது. இது விஷயத்திலும் கவனமெடுக்கவும்” என மகஜரில் கூறப் பட்டுள்ளது.

அல்-அக்ஸா தீமூட்டு வழக்கு

## நான் குற்றவாளியல்ல

### நீதிமன்றத்தில் ஆஸ்திரேலிய இளைஞர்

ஜெரூசலம், அக். 6

அல்-அக்ஸா புனித பள்ளிவாசலுக்குத் தீமூட்டியதாக தன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இருபத்தாறு வயது இளைஞரான மைக்கேல் ரோகன் இன்று மறுத்தார்.

“நான் குற்றவாளியல்ல!” என்று அவர் நீதிமன்றத்தில் கூறினார்.

இவர் மீதான வழக்கு இன்று ஜெரூசலத்திலுள்ள நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

துப்பாக்கிக் குண்டுகள் உட்புக முடியாத 7 அடி கண்ணாடி கூண்டுக்குள் மைக்கேல் நிறுத்தி வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. எதிரி சார்பில் பிரபல இஸ்ரேலிய வழக்கறிஞர் ஆஜரானார். அட்டோர்னி ஜெனரல் வழக்கை நடத்தினார் பலத்தபொலிஸ் பாதுகாப்புடன் விசாரணை நடைபெறுகிறது.

# அனலைதீவில் தண்ணீர் கூட குடிக்க மறுத்தார் அடிகளார்

## ஆலயப்பிரவேசம் நடைபெறாததே காரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய் எதிர்பார்த்தபடி அனலைதீவில் ஆலயப் பிரவேசம் திருப்திகரமாகவும், கொடுக்கப்பட்ட வாக்குறுதிப்படியும் நடைபெறாததால் நேற்று முன்தினம் அங்கு ... தியபோது திருப்தியளிக்கக் கூடிய முறையில் ஆலயப் பிரவேசம் நடைபெறவில்லை என்றும், தீண்டாமை பாராட்டப்படும் இடத்தில் தண்ணீர்கூடக் குடிப்பதில்லை என்ற தமது விரதத்தைக் ... ரும்மகாவித்தியாலயத்துக்கு அருகேயுள்ள முருகமூர்த்தி கோவிலுக்குச் சென்றனர். உள்ளூர் ஹரிஜனர் எவரும் அங்கு வரவில்லை. பாடசாலைப் பிள்ளைகள் மட்டுந்தான் கோவிலுக்குள் நிற்ப...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொலிஸ் சுப்பிரிண்டன் வட பகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்இன்ஸ்பெக்டர்களுக்கும் அனுப்பி வைத்துள் ...ர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பொலிஸ் சுப்பிரிண்டன் அறிவித்துள்ளார். (கா.நி)

தில் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ் தலைமையில் நடந்த கூட்டத்தின் பின்னரே இது அறிவிக்கப்பட்டது.

குருநகர் மீன்பிடித் துறைமுகத்தின் சுமார் இரண்டு மைல்கடல்பரப்புஇச்சேவையின் மூலம் இளைஞர்களால் செய்து முடிக்கப்படும். வடக்கில் முதலில் நடக்கும்தேசிய வாலிபர் சேவையின்வேலைத்திட்டம் இதுதான். இவ்வேலைத்திட்டத்துக்கு இன்னமும் நூறு வாலிபர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள்.

(கொட்டடி) கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 25 வாலிபர்களும் கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவிலிருந்து 25 வாலிபர்களும் இச்சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் இம் மூன்று கிராம சேவையாளர்களிடமும் இருப்பதாகவும் இம் மாதம் 10-ம் திகதிவரையுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் இப் பகுதி வேலையற்ற வாலிபர்களை உடனடியாக தங்கள் கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு எச்.ஈ. புள்ளைநாயகம் அறிவித்துள்ளார்.

இதில் சேரும் வாலிபர் ...வங்கிப் புத்தகமும் கொடுக்கப்படும். நாள் ஒன்றுக்குசம்பளமாக 3 ரூபா வழங்கப்படும். இதில் தினசரி ஒரு ரூபா வீதம் இவர்களின் சேமிப்பு வங்கியில் வைக்கப்படும் வாராவாரம் சம்பளம் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது வேலைத் திட்டம் நாவாந்துறையிலும் கொழும்புத் துறையிலும் நடைபெறுமென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரு ஜே ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 29-ம் திகதி மற்றொரு வேலைத் திட்டத்தை சாவகச்சேரி அல்லது பளைப் பகுதியில் ஆரம்பித்து வைக்கலாம் எனவும் எதிர்பார்க்சப்படுகின்றது (கா.நி)

---

பட்டதாரிகள் ஆசிரியர் சங்கம்

# சம்பள நிர்ணய சபையை எதிர்த்து தீர்மானம்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைப் பட்டதாரிசள் ஆசிரியர் சங்கத்தின் விசேஷகூட்டமொன்று சமீபத்தில் தேயிலைபிரச்சார சபை மண்டபத்தில் நடைபெற்றது சம்பள நிர்ணய சபை தனது இடைக்கால அறிக்கையில்ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒய்வுப்பணத்துக்காக வெட்டப்படும் 2வீதத்தையும் நிறுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததையிட்டு சம்பள நிர்ணய சபையை எதிர்த்து ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

ஆசிரியசங்கத்தின்உபதலைவர் திரு பிரி எஸ் பர்ணண்டோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் காரியதரிசி திரு கே யு எஸ் பெரேரா மேற்படி தீர்மானத்தைக்கொண்டுவந்து நிறைவேற்றினார். இவர் பேசுகையில் அரசாங்கம் ஆசிரியர்கள் விடயத்தில் பாரபட்சம் காட்டுவதாகவும் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதில்லை யென்றும் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் எல்லாம் ஆசிரியர்களின்பிரச்னைகளைக் கேலிக்கிடமாக்கியுள்ளன எனவும் குறிப்பிட்டார்

---

# விஜயலட்சுமி பண்டிட் நாளை யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்ரீமதி விஜலட்சுமி பண்டிட் நாளை நண்பகல் யாழ்ப்பாணம் வருகின்றார் நண்பகல் 12-20 மணிக்கு இவர் பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும்போது இவருக்கு அங்கு மகத்தான வரவேற்பளிக்கப்படும்

இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் இவரது நிகழ்ச்சிகள் விபரம்:-

நாளை மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாண நகரமண்டபத்தில் மாநகரசபை அளிக்கும் நகர வரவேற்பு 6மணிக்கு யாழ்ப்பாணம்வீரசிங்கம்மண்டபத்தில் சொற்பொழிவு, இரவு 8 மணிக்கு சாந்தி நூற்றாண்டு விழா யாழ். மாவட்டக்குழுவின் இராப்போசன விருந்து.

இரவு யாழ்ப்பாணம் 'கிங்ஸ் ஹவுஸில் தங்குவார் 9ம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ். நகரமண்டபத்தில் மகளிர் பேரவையில் சொற்பொழிவு. 2 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்படுதல் (கா நி)

---

வயிற்றோட்ட நோய்க்கு

# 7 நாளில் 10 குழந்தைகள் வேலணையில் பலி

அல்லைப்பிட்டி, திங்கள்

கொடிய வரட்சியின் காரணமாக வேலணைப் பகுதியில் ஏற்பட்டுள்ள ஒருவித வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற நோய்களின் காரணமாக கடந்த ஒரு கிழமைக்குள் பத்துக் குழந்தைகள் திடீரென இறந்துவிட்டன.

பல குழந்தைகள் இவ்வூர் அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் தனியார்துறை மருத்துவ மனைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றன. இக்குழந்தைகள் ஒரு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் உட்பட்டவர்களாவர்.

---

# புங்குடுதீவு 2கோயிலில் தமிழ் அர்ச்சனை நடந்தது

ஊரைதீவு, திங்கள்

'மக்களுக்குள் இருக்கிற ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டால் தான் மனித சமுதாயம் ஆத்மீக விடுதலை பெற்று வாழமுடியும் திருமுறைத் தமிழ் அர்ச்சனையின் விரிவு பற்றித் தெளிவானதோர் ஒளிமிக்கப் பாதை எனக்குத் தெரிகிறது'

புங்குடுதீவு கிழககு கலட்டிப்பிள்ளையார் ஆலயத்தில் தமிழ் அர்ச்சனையை நடத்தி வைத்துப்பேசுகையில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் மேற்கண்டவாறு கூறினார். தமிழ் அர்ச்சனையைத் தொடர்ந்து புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது.

புங்குடுதீவு சிவன் கோவிலிலும் தமிழ் அர்ச்சனை நடைபெற்றது. பிரம்மஸ்ரீ ஐ. கைலாயநாதக்குருக்கள் தமிழ் அர்ச்சனையைச் செய்தார்.

---

# ஆலயப்பிரவேசம் நடைபெறுததே காரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

எதிர்பார்த்தபடி அனலைதீவில் ஆலயப் பிரவேசம் திருப்திகரமாகவும், கொடுக்கப்பட்ட வாக்குறுதிப்படியும் நடைபெறுததால் நேற்று முன்தினம் அங்கு சென்ற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அங்கு சாப்பிட மறுத்ததுடன், தண்ணீர்கூடக் குடிக்காமல் அங்கிருந்து புறப்பட்டார்

சாப்பிடவேண்டும் என்றும், பாலாவது பருகவேண்டும் என்றும் பலர் வற்புறுத்தியபோது திருப்தியளிக்கக்கூடிய முறையில் ஆலயப் பிரவேசம் நடைபெறவில்லை என்றும், தீண்டாமை பாராட்டப்படும் இடத்தில் தண்ணீர்கூடக் குடிப்பதில்லை என்ற தமது விரதத்தைக் கைவிடமுடியாது என்றும் கூறி அடிகளார் மறுத்துவிட்டார்.

அனலைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து பாடசாலைப் பிள்ளைகளும், அடிகளாரும், மற்றும் பலரும்மகாவித்தியாலயத்துக்கு அருகேயுள்ள முருகமூர்த்தி கோவிலுக்குச் சென்றனர். உள்ளூர் ஹரிஜனர் எவரும் அங்கு வரவில்லை. பாடசாலைப் பிள்ளைகள் மட்டுந்தான் கோவிலுக்குள் நிற்பதற்கு இடம் போதுமானதாக இருந்தது பூசை முடிந்ததும் திரும்பிய அடிகளார் அதற்கு மேலும் அனலைதீவில் தங்கியிருக்க விரும்பாமல் உடனடியாகவே நயினுதீவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

---

# டயர் கூட்டுத்தாபன ஊழியர் நேற்று வேலைக்கு திரும்பினர்

## பெற்றோலியம், கடற்தொழில்: நிலைமையில் மாற்றமில்லை

கோட்டை, செவ்வாய்

வேலைநிறுத்தத்திலீடுபட்டிருந்த டயர் கூட்டுத்தாபன ஊழியர் நேற்று மாலை வேலைக்குத் திரும்பினர் இவர்கள் கடந்த ஒருமாதமாக வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்தனர். பெற்றோலியம், கடற்தொழில் கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்த நிலைமையில் எவ்விதமாற்றமுமில்லை.

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும். தேசிய சேவை அமைச்சருக்குமிடையில் நேற்று மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாகஅமையவில்லை எனத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பேச்சுவார்த்தை முடிவின் பின்னர் இதனை அறிவித்தனர். இரண்டுமாத போனஸ் மற்றும் சலுகைகள் வழங்கவிருப்பதை அமைச்சர் பிரதிநிதிகளிடம் வற்புறுத்தினார் கைத்தொழில் அமைச்சுதனக்குக்கீழுள்ள கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கியுள்ள சம்பளஉயர்வு போல தமக்கும் வழங்கப்பட வேண்டுமெனத் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

கடற்தொழில் கூட்டுத்தாபன ஊழியரின் வேலைநிறுத்த நிலைமையிலும் எவ்வித மாற்றமுமில்லை.

---

ஜோர்டானில்

# சதி முறியடிப்பு

அம்மான், அக் 6

ஜோர்டான் மன்னர் ஹுசைனின் ஆட்சியை கவிழ்க்கச் செய்யப்பட்ட சதி முறியடிக்கப்பட்டுவிட்டதாக இன்று இரவு அம்மான் அரசாங்க ஒலிபரப்பு ஒன்று அறிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த சதி முயற்சி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது ஜோர்டான் விடுதலைக் கட்சியினரால் இந்த சதி மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

---

# தற்காலிக ஓடிட்டர்ஜெனரல்

கொழும்பு, திங்கள்

ஓடிட்டர் ஜெனரலாக இதுவரை கடமையாற்றி வந்த திரு. டி. ஆர். ரெட்டி நாயக்கா வெளிநாடு சென்றுள்ளமையால், இன்று தொடக்கம் திரு. ஏ. குணநாயகம் தற்காலிக ஓடிட்டர் ஜெனரலாக நியமனம்பெற்றுள்ளார்.

---

# திருமணஞ் செய்யத்தடை: இளைஞன், யுவதி தற்கொலை

அல்லைப்பிட்டி, திங்கள்

திருமணம் செய்வதற்குப் பெற்றோர் தடைவிதித்ததால் இளைஞனும் யுவதியும் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்ட பரிதாப சம்பவமொன்று வேலணைகிழக்கு சாட்டி என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

தற்கொலைசெய்தவர்களில் இளைஞனை நாகலிங்கம் அருணசலம் உயர்வகுப்பைச் சேர்ந்தவரென்றும், இளம்பெண்ணை கந்தையா பரமேஸ்வரி சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச்சேர்ந்தவரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரணமான இளைஞன் ஏற்கனவே மணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தை என்றும், மனைவியைப் பிரிந்து வாழ்ந்துவந்தாரென்றும் விசாரணையில் மேலும் தெரியவந்தது.

வேலணைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. சதாசிவம் மகாலிங்கம் மரணவிசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

---

ஆயுதங்களுடன் நள்ளிரவில் அகப்பட்டனர்

# நீண்ட நாள் களவுகள் அம்பலம்; பொலிஸ் பாதுகாப்பில் வாலிபர்கள்

யாழ்ப்பாணம் செவ்

நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையில் பூட்டைஉடைத்துக் கொண்டு நின்ற இரு வாலிபர்கள் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்களாம். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 3மணிக்கும் 4 மணிக்குமிடையில் நடைபெற்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

கைதான வாலிபர்களிடமிருந்து பூட்டுக்கள் உடைக்கும் இரும்பு ஆயுதம் ஒன்றும் களவாடப்பட்டதாகக் கூறப்படும்சிலபொருட்களும் மீட்கப்பட்டதாக பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் தெரிவித்தார்.

வண்ணார்பண்ணை, கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த இவ்விரு வாலிபர்களையும் யாழ்ப்பாணம் பஜாரில் வைத்து குற்றத் தடுப்பு பொலிஸ் சார்ஜன்ட் தாமோதரமும் கான்ஸ்டபிள் இரத்தினமும் கைது செய்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் பஜாரிலும் கே. கே. எஸ். வீதியிலுமுள்ள ஜவுளிக் கடைகளில் நடைபெற்ற களவுகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். சந்தேக நபர் இருவரும் பொலிஸ் பாதுதாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். புலன் விசாணை நடைபெறுகின்றது.

கா நி)

---

# யாழ் நகரில் யு.என். பி கிளை

யாழ்ப்பாணம், திங்கள்

ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைக்காரியாலயமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அறியப்படுகின்றது இதுசம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்கள் சிலர் யாழ்ப்பாணம் வந்து போனதாகவும் ஏழாம் திகதி வாக்கில் செனட்டர் ஜினதாஸ நியத்திபால யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் தெரிகின்றது. யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அனுதாபிகளைச் சந்தித்து கிளைகள் அமைப்பது பற்றி திரு ஜினதாஸ நியதிபால ஆராய்வார் என்று தெரிகின்றது.

---

# பதிவுகாரர்க்கு விண்ணப்பம்

பருத்தித்துறை, திங்கள்

உடுப்பிட்டிக்கோயிற்பற்று பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரராகக் கடமையாற்றிய திரு எஸ். வீரவாகுஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஒரு பதிவுகாரர் நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

---

# டாக்டர்பந்துலகொலைவழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரம்

கோட்டை, செவ்வாய்

டாக்டர் பந்துலபெரேரா கொலை வழக்கின் எதிரிகள் நால்வரும் நேற்று உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 24-ம் திகதி டாக்டர் பந்துல பெரேராவை கொலை செய்ததாக என். முத்தையா என்பவர் மீதும், மேற்படி கொலைக்கு உடந்தையாக இருந்ததாக ஏ. சுப்பிரமணியம், கதிரவேலு ஆண்டி, அந்தோனி பெர்ணண்டோ ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீண்ட நாட்களாக நடைபெற்ற விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரிகள் நால்வரையும் உயர்நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தினார்.

---

# ஆசிரியர் விசேட பதவிக்கான பரீட்சை

பருத்தித்துறை, திங்கள்

ஆசிரியரின் 1-ம், 2-ம், 3-ம் விசேடபதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 7-ம் திகதியன்று கொழும்பில் 22 ஸ்தானங்களில் ஆரம்பமாகின்றன.

சுமார் 50 ஆயிரம் ஆசிரியர் இப்பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்நேர்முகப் பரீட்சை சுமார் ஒன்றரை மாத காலம்வரை தொடர்ந்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நகை ஈடுபிடிக்கும் கடைக்கு ஐந்துவருஷத்துக்குக் குறையாத அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. நம்பிக்கை நாணயத்துக்கு அத்தாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். உரிமையாளர், 52, ஜா-எல. 1458

### வேலை தேவை

ஆலைகளிலோ, வியாபார தொழில்ஸ்தாபனங்களிலோ அனுபவம் வாய்ந்த ஆங்கில தமிழ் கணக்காளருக்கு யாழ் நகரில் வேலை தேவை. விளம்பர இல. 1455, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1455


வடமராட்சியில்

## மேலும் ஒரு காரியாதிகாரி கந்தோர்

புலோலி, திங்கள்

வடமராட்சிப் பகுதியில் மேலுமொரு காரியாதிகாரி கந்தோர் நிறுவப்படவிருப்பதாகவும், நெல்லியடியில் நிறுவப்படவிருக்கும் இக்காரியாதிகாரி கந்தோர் அடுத்த வருடமுற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.


REGAL JAFFNA
Daily 4-45, 7-00, 9-45p.m
Carry Grants Samantha Eggar
in
WALK DON'T RUN

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
புதிய பூமி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி. ஆர். - மாதுரிதேவி
நடித்த
என் தங்கை

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
மகாதேவி

MANOHARA
JAFFNA



## விளம்பரம்

### கைதடிக் கிராம சபை

கீழ்க்காணும் வேலைக்கு 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் ஐப்பசி மாதம் 15-ம் திகதி 12 மணி வரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் கிராம சபைக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

**வேலையின் விபரம்**

கல்லாகம் ரேட்டு அமைத்தல்.

இ. செல்லையா,
தலைவர்,
கிராமசபை கைதடி.
கிராமசபை அலுவலகம்,
கைதடி, 5-10-1969.

1779


## திராட்சை மாலை அணிவித்து வரவேற்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

இன்றைய உலகநிலையைப் பார்க்கும் போது சண்டைகளும் வீண் பிரச்னைகளும் தலைதூக்கியுள்ளன. இலங்கையிலும் இதேபோன்ற பல பிரச்னைகள் எழுந்துள்ளன. சமாதான மூலமே இவற்றை நிவர்த்திசெய்ய முடியும். உண்மைச் சமாதானம் இறை அன்பிலிருந்தே பிறக்கிறது. என யாழ். துணை ஆயர்வந் எல். ஆர். அன்ரனி இளவாலை சென்யேம்ஸ் பங்கு மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திராட்சைப்பழக் குலைகளினுல் கட்டப்பட்ட மாலையை திரு. தோ. பெனடிக்ற் ஆயருக்குச் சூட்டினுர். செல்வன் ரி.ஆர். மனோகரன் உபசாரப்பத்திரம் வாசித்தளித்தார்.

துணை ஆயர் திருநாள் பூசையை நிறைவேற்றிச் சிறுவர்களுக்கு முதல் நன்மை, உறுதி பூசுதல் என்பனவும் வழங்கினுர்.


வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - கண்ணும்பா - கிரிஜா
நடித்த
மனோகரா
(புதிய கொப்பி)

ராஜா
யாழ்ப்பாணம்)


உதைபந்து

## இரு போட்டிகள்

மல்லாகம், திங்கள்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் கலந்துகொண்ட இரண்டாம்பிரிவு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்கள் பெற்றுக்கொண்டமையால் ஆட்டம் சமமாக முடிந்தது. திரு. ஏ. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

மூன்றும் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில் யூனியன் கல்லூரியினர் 2-0 கோல்களால் வெற்றியீட்டினர். போட்டிக்கு திரு. வி. ஜெயராசசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## பெற்ருர் - ஆசிரியா சங்க நிர்வாகிகள்

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைப் பெற்ருர்-ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. க. சி தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பாடசாலையில் மேல் வகுப்புகள் வைத்தல், புதிய வகுப்பறைகள் அமைத்தல், மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஆதியன பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்-

தலைவர்: க. சி. தருமலிங்கம், செயலாளர்: சி. இரத்தினசபாபதி, உப-செயலாளர்: பொ. வைத்திலிங்கம், பொருளாளர்: செ. நாகராசா, உப-பொருளாளர்: திருமதி த. தியாகராசா.

12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

### செவ்வாய் 7—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்

## "கல்வியறிவால் மட்டும் சமுதாயம் உயர்ச்சியுடையாது"

மட்டுவில், திங்கள்

"வகுப்பறைகளில்போதிக்கப்படும் கல்வியறிவை மட்டும் வைத்துக்கொண்டு, எமது இளம் சமுதாயம் உயர்ச்சியடைந்துவிட முடியாது, அவர்களின் உயர்ச்சிக்கு, அறிவை வளர்க்கக் கூடிய கல்வி அறிவுடன், உடலையும், உடல் உறுப்புகளையும் வளர்க்கக் கூடிய தேகாப்பியாசம், விளையாட்டு போன்றவைகளும் அத்தியாவசியம் தேவைப்படுகின்றன. எனவே, இது போன்ற, பல விளையாட்டுக் கழகங்கள், நமது கிராமங்கள்தோறும் அமைக்கப்பட வேண்டும்."

இவ்வாறு மட்டுவில் தெற்கு கந்தர் கரபந்தாட்டக் கழக அங்குராற்பண விழாவிற்குத் தலைமைதாங்கி உரை நிகழ்த்திய, சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினுர்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது மனித வாழ்க்கைக்கு, குறிப்பாக வாலிபர் மத்தியிலும் உடல்பலமடையவும், சுறுசுறுப்பும், புத்திக் கூர்மையும் கொடுக்கக்கூடிய விளையாட்டுக்கழகங்களை அமைக்க வேண்டியது அவசியம்.

திரு. எம். சின்னத்துரை பேசுகையில் விளையாட்டில் போட்டி இருக்கலாம், ஆனுல் பொருமை இருக்க கூடாது என்ருர். திரு. இரா. குருசாமி, எஸ். சாந்தகுமாரன், உட்பட பலர் பேசினர்.

## 'குருநகர் மக்கள் விழா'

யாழ்ப்பாணம், செவ்.

குருநகர் கலைக்கழகத்தின் 10வது ஆண்டு நிறைவுவிழா வினையொட்டிய போட்டித் தொடரில் ஒன்ருன மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி குருநகரில் "குருநகர் மக்கள் விழா" வாக நடைபெற்றது.

றெக்கிளமேசன் கடலணை மைதானத்திலும் குருநகர் திறந்த வெளியிலும் நடைபெற்ற இப்போட்டியில் நெய்தல் வளர்பிறை மன்றம், இளைஞர் கலைக்கழகம், புனிதவளன் விளையாட்டுக் கழகம், குருநகர் சனசமூக நிலையம், யுத் கவுன்சில், அப்பலோ 11 விளையாட்டுக்கழகம் போன்ற பல இயக்கங்கள் பங்குபற்றின.

பெரும் திரளான மக்களின் மத்தியில் விறுவிறுப்பாகவும் வெகு சிறப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். மாநகராட்சி மன்றமுதல்வர் திரு சி நாகராசா தலைமைதாங்கினுர்.

கழகத் தலைவர் திரு இ. டோறஸ் வரவேற்புரை நிகழ்த்தினுர். அதனைத் தொடர்ந்து மாநகர முதல்வர் சிறப்புரை நிகழ்த்துகையில் குருநகர் கலைக்கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டிப் பேசினுர்.

சிறப்புரையைத் தொடர்ந்து மெய்வல்லுநர் நற்சான்றிதழ்கள் வெற்றிவீரர்

## "கலை வளர்ச்சிக்கு இளைஞர் ஆர்வம் அவசியம்"

உடுவில், திங்கள்

"நாடகம் வளர, இளைஞரின் ஆர்வம் தேவை, அவர்களின் ஆர்வம் தடைப்பட்டால் கலையின் வளர்ச்சி குன்றும். அரசாங்கம் உட்பட மக்களும், கலைஞர்களும் கலைக் கழகங்களும், பாடசாலைகளும் கலையை வளர்க்கப்பாடுபடவேண்டும்" என கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கதம்பவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் கூறினுர்.

மேற்படி வித்தியாலய மாணவர்களின் நடனம், நாடகம், இணுவில் இசை, நடன, கிராமியக் கலைக்கல்லூரி மாணவிகளின் நடனம், அருச்சுனன் சிவதரிசனம்', நாட்டிய நாடகம் ஆகியவை கதம்ப விழாவில் நடைபெற்றன.

## சண்டிலிப்பாய் விளையாட்டு கழகத்திற்கு முதலிடம்

சங்கானை, திங்கள்

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகம் பிரிவு ஒன்றின் 3-வது ஆண்டு விளையாட்டுப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது, வணபிதா எஸ். குலேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இவ்வருட விளையாட்டுச் சாம்பியனுக சண்டிலிப்பாய் வடக்கு விளையாட்டுக் கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று 1-ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 2-ம் 3-ம் இடத்தை முறையே மாதகல் விளையாட்டுக் கழகமும், மானிப்பாய்ஹட்றேஞ்சஸ்ஸும் பெற்றன.

ஏனைய பெறுபேறுகள்:- அஞ்சல் ஓட்டப்போட்டி சம்பியன் மாதகல் விளையாட்டுக்கழகம் பெண்பாடசாலைக் யாழ்ப்பாணக் கல்லூரி வெளியூர் விளையாட்டுக் கழகங்களுக்கான அழைப்பு அஞ்சல் ஓட்டப் போட்டி: இராணுவப் பகுதி மைதானத்தில் நடைபெற்ற 5000 மீற்றர் சயிக்கிள் ஓட்டப் போட்டி: வட்டு யாழ். கல்லூரி மாணவன் எஸ். சுந்தரேஸ்வரன். முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்ட சகலரும் பங்கு பற்றக் கூடியதுமான "பென்ரத்திலன்" போட்டியில் வட்டுக் கோட்டை சரஸ்வதி விளையாட்டுக் கழக உறுப்பினர் வி தில்லையம்பலம்.

......

## விஷமிகள் தொல்லை

### பஸ் சாரதிகள் கவலை

# தமிழ்பேசும் எழுதுவினைஞர் சங்க 8-வது ஆண்டுக்கூட்டம்

## திருக்கேதீஸ்வரத்தில் இடம் பெறும்

வெள்ளவத்தை, திங்கள்

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களின் குறிப்பாக எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களின் ஒரேயொரு தொழிற்சங்கமாகிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தனது 8-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தினை எதிர்வரும் வியாழக்கிழமை திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் வெகு சிறப்பாக நடாத்தவிருக்கின்றது.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கலந்துகொள்ளும் இக்கூட்டத்திற்கான சகல ஒழுங்குகளையும் செயற்குழு செய்து முடித்துள்ளதாகப் பொதுச் செயலாளர் திரு இ இராமநாதன் நமது நிருபரிடம் தெரிவித்தார். சகல உறுப்பினர்களுக்கும் கடமை லீவு, புகையிரத ஆணைச்சீட்டு என்பன பெறுவதற்கும் மன்னுரில் தங்குவதற்கும் தக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### வெள்ளிக்கிழமை விடுமுறை

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தனது 8-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றவிருக்கின்றது

சைவசமயத்தினர் தவிர்ந்த ஏனைய அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் அவரவர் சமய வழிபாட்டுக்கு எனச் சிறப்பு விடுமுறை பலகாலமாகவழங்கப்பட்டுக் கொண்டுவருகின்ற வேளையிலே இதே சலுகையைச் சைவ சமயத்தினரான அரசாங்க ஊழியர் தமக்கும் வழங்கப் பல ஆண்டு காலமாகத் தொடர்ந்தும் வற்புறுத்திக்கொண்டு வந்துள்ள போதிலும் அரசாங்கம் இச்சலுகையை மறுத்துவருகிறது. இது சைவ சமயத்தினரைப் பாகுபாடு செய்வதாகவும், மதவிரோதக் கொள்கையாகவும் அமைகிறது. இதைவிடுத்து இரண்டு மணித்தியாலங்கள் சிறப்பு விடுமுறையாகப் பிரதி வெள்ளிக்கிழமையும் சைவர்களுக்கு வழங்கப்படவேண்டும்

அரசாங்க ஊழியரின் வீடில்லாப் பிரச்னையைத் தீர்க்குமுகமாகச் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அவரவர் வேலைத்தலங்களில் குடியிருக்க அரசாங்கவிடுதி வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவேண்டுமென்றும் அரசாங்கத் திணைக்களங்களுக்குப் பொதுமக்களோ தொழிற்சங்கங்களோ அனுப்பும் கடிதங்களுக்குக் குறைந்தது இரண்டுவாரத்துக்குள் பதில் கிடைக்கும்படி அரசாங்கம் சட்டமியற்றல் வேண்டும் என்றும் கூறும் தீர்மானங்களோடு வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப்படவிருக்கின்றன

## "கலை வளர்ச்சிக் கழகம் நாடெங்கும்வளரவேண்டும்"

உடுவில், திங்கள்

"அல்லும் பகலும் பாடுபடும் மனித வர்க்கம் சில நிமிடப் பொழுதையாவது மகிழ்ச்சியுடன் கழிக்கவே இறைவன் கலைகளைப் படைத்தான். எமது கலை கலாச்சாரங்கள் இறைவனுடன் இணைந்து, பண்டை முதல் எமது மொழியோடும், உணர்வோடும் வளர்ந்து வந்தன. ஐரோப்பிய நாகரீகத்தால் இவை இடையில் நசிந்துவிட்டாலும் இன்று மீண்டும் அவை புத்தொளி வீச ஆரம்பித்துள்ளன. அதற்குத் துணை நிற்கும் கலைவளர்ச்சிக் கழகங்கள் நாடெங்கும் வளர வேண்டும்."

உடுவில் கலைவளர்ச்சிக் கழகத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய உடுவில் கிராம சபை அக்கிராசனர் திரு எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

உடுவில் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழகச் செயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் பேசுகையில், தமிழையும் கலையையும் போற்றும் நம்மிடையே மேல்நாட்டுக்கலைகள் மலிந்து வரும் இவ்வேளையில் தன்மானமும் தமிழுணர்ச்சியுமுள்ள தமிழர்கள் தம் கலை கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிக்கொள்ள முயல வேண்டும் என்று கூறினுர்.

திருவாளர்கள் த. கந்தசாமி, கலைமணி வடிவேலு, சிவப்பிரகாசபிள்ளை முதலியோரும் பேசினர். நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். முத்துலிங்கம், உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். ஆறுமுகம், ரி. செல்லத்தம்பி, எஸ். வடிவேல், இணைச் செயலாளர்கள்: திரு. த. சி சண்முகலிங்கம், திரு. என். ஆர். சின்னராசா, தனுதிகாரி: திரு. எஸ். அன்னராசா. பதினெரு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

12 தரம் தண்டனை பெற்ற ஒருவருக்கு

## சைக்கிள் திருடிய வழக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
மகாதேவி


சிவாஜி - கண்ணும்பா - கிரிஜா
நடித்த
மனோகரா
(புதிய கொப்பி)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p m
John Phillip Law,
Marisa Mell,
Terry Thomas
in
DANGER DIABOLIK
(Color/Scope)

ராஜா
யாழ்ப்பாணம்)
Daily at 4-45, 7& 9-45p m.
Rogger Brown as a
Gunfighter
in
ARGOMAN THE
FANTASTIC SUPERMAN
(Technicolor-scope)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன்
[யாழ். நகர்]
கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாஸா
(கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
நீயும் நானும்

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

......

## ஆசிரியர்நியமனம்

வேலணை, திங்கள்

கடந்த மாதத்தில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு பயிற்றப்பட்ட பௌதிக ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொகுதி எம்.பி. திரு வ.நவரத்தினம் இவ்வித்தியாலயத்திற்கு பௌதிக ஆசிரியர் ஒருவரை விரைவில் நியமிக்குபடிசம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கேட்டிருந்தார்.

......

## விஞ்ஞான கூடம் அமைக்க முயற்சி

முசலி, திங்கள்

மன்னார் மாவட்டத்தில் கல்வி இலாகா கொடுத்த நன்கொடையின் ஒரு பகுதியைக்கொண்டு, முருகன் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஒரு விஞ்ஞான கூடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இப்பாடசாலையில் விஞ்ஞானகூடம் இல்லாத காரணத்தால் எத்தனையோ மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி பெறுவதற்கு யாழ்ப்பாணம் அநுராதபுரம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இம் முயற்சியில் மன்னார் மாவட்டக்கல்வி அதிகாரி திரு.வி. நடராஜாவும், மன்னார்ஆட்சி மன்ற உறுப்பினர் திரு.வி. ஏ அழகக்கோனும் ஈடுபட்டுள்ளனர்.

டோறஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாநகர முதல்வர் சிறப்புரை நிகழ்த்துகையில் குருநகர் கலைக்கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டிப் பேசினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து மெய்வல்லுநர் நற்சான்றிதழ்கள் வெற்றிவீரர்களுக்கு வழங்கப்பட்டன. கடற்சாரணர்களுக்கு கலைச்சின்னங்களும் முதல்வரால் வழங்கப்பட்டன,

விளையாட்டுப்போட்டி பிரதம மேற்பார்வையாளர் ஆசிரியர் சி அகஸ்ரின் நன்றி தெரிவித்துப் பேசினார்.

பெற்று 1-ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 2-ம் 3-ம் இடத்தை முறையே மாதகல் விளையாட்டுக் கழகமும், மானிப்பாய்ஹட்றேஞ்சஸ்ஸும் பெற்றன,

ஏனைய பெறுபேறுகள்:- அஞ்சல் ஓட்டப்போட்டி சம்பியன் மாதகல் விளையாட்டுக்கழகம் பெண்பாடசாலைக்கான அழைப்பு அஞ்சல் ஓட்டப் போட்டிக்குரிய வெள்ளிக் கிண்ணத்தை பருத்தித்துறை மெதடிஸ்பெண்பாடசாலை தட்டிக் கொண்டது.

ஆண்கள் பாடசாலைக்கான அழைப்பு அஞ்சல் ஓட்டம்: வட்டுக்கோட்டை

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 12-ந் திகதி (7-10-69)

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** எண்ணிய கருமத்தில் இன்று வெற்றி உண்டு, புண்ணிய வழிகளில் பொருட்செலவும் ஏற்படும். கண்ணியமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம். வரவேற்கத்தக்கதினம்.

**ரிஷபம்-** புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

**மிதுனம்-** புதிய கோணத்தில் இருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

**கடகம்-** மனதில் விரக்திநிலை தென்படும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினால் நஷ்டமேற்படும். பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்குவிவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்.

**சிம்மம்-** அதிகசிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும். உம்மிடம் உதவிபெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள். விழிப்புடன் இருக்கவும்.

**கன்னி-** வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல்நலம் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானம்வேண்டும்.

**துலாம்-** சிறிவரும்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராதவிதமாக உடல்நலம் பாதிக்கப்படும். பொறுமைவேண்டும்,

**விருச்சிகம்-** கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். தாய்வழி செய்தியும் வரலாம். அறிஞர்கள் ஆதரவு தருவர். தொழில்புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும். இன்று சுபதினம்.

**தனுசு-** அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராதபணம் கைக்கு கிடைக்கலாம்.

**மகரம்-** சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று. சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம். சுகாதாரம் வேண்டும்.

**கும்பம்-** குடும்பநலனில் அதிக ஆர்வம் பிறக்கும். பந்துக்களின் ஆதரவு பெருகும். நிதானமான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித்தரும். பொருள் விஷயத்திலும் முன்னேற்றம் உண்டு.

**மீனம்-** வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

யாட்டுக் கழக உறுப்பினர் வி தில்லையம்பலம்.

......

## விஷமிகள் தொல்லை

### பஸ் சாரதிகள் கவலை

பூநகரி, திங்கள்

பூநகரிப்பகுதியில் கிராம சபையினரால் போடப்பட்ட பஸ் தரிப்புப்பலகைகளில் பல தினந் தினம் இடம் மாறிப் போடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. சில பலகைகள் ஒருநாள் இருந்து மறுதினம் மறைந்தும் விடுகின்றன. இதனால் பஸ் சாரதிகளுக்கு மிகவும் தொல்லையாயிருப்பதாக பஸ் சாரதிகள் அலுத்துக்கொள்கின்றனர். இதுசம்பந்தமாகச் சிலர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகின்றது.

## நோய் பரவுகிறது

அல்லைப்பிட்டி, திங்கள்

நெடுந்தீவு, புங்குடுதீவு போன்ற இடங்களில் கொடிய வரட்சி நிலவுவதனாலும், அசுத்தமடைந்த நீரை உபயோகிப்பதனாலும் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற ஒருவித நோய் பரவி வருகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் தினமும் இவ்வூர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## நீர்வேலியில் கதம்ப விழா

உரும்பிராய், திங்கள்

வலிகாமம்கிழக்குஆசிரியர் சங்கத்தின்கதம்பக்கலைவிழா இம்மாதம் 9-ம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் யாழ். நகரபிதா திரு. எஸ். நாகராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நடனங்கள், நாடகங்கள் நல்லிசைப் பாடல்கள் முதலிய நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறும்.

அச்சுவேலி சென். திரேசா பாடசாலை, உரும்பராய் இந்துக்கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் மகாவித்தியாலயம், இடைக்காடு மகா வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆகியவைகள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்.

விழாவை சங்கத் தலைவர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

இக்கூட்டத்தில் கழகச் செயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் பேசுகை யப்பட்டது.

12 தரம் தண்டனை பெற்ற ஒருவருக்கு

## சைக்கிள் திருடிய வழக்கில் 18 மாத கடூழியச் சிறை

மல்லாகம், திங்கள்

பன்னிரண்டு தடவைகள் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட நபர் மீண்டும் சைக்கிள் களவு சம்பந்தமாக குற்றஞ் சாட்டப்பட்டு தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து மல்லாகம் நீதிபதி திரு.எஸ்.ஆனந்த குமாரசாமி ரூபா 500 அபராதமும் 18 மாதகால கடூழியச் சிறையும் விதித்துத்தீர்ப்பளித்தார். எதிரி இரு வருடகால பொலிஸ் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப்பொலிஸார் ஐ.நவரத்தினம் என்பவர் மீது இவ்வழக்கில் கீரிமலை வாசியான எஸ்.கணேசு என்பவரின் 540 ரூபா பெறுமதியான சைக்கிளை திருடியதாக குற்றம் சுமத்தியிருந்தனர்.

பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர்.ஜே. செல்வரத்தினம் வழக்கை நடாத்தினார்.

## ஜி. சி. ஈ. (சாதாரண)

## கர்நாடக சங்கீத பரீட்சை முடிவு வெளிவரவில்லை

பருத்தித்துறை, திங்கள்

கடந்த க.பொ.த (சாதாரண) பரீட்சைகளில் கர்நாடகசங்கீதத்தை ஒருபாடமாகக் கொண்டு பரீட்சையெடுத்த நூற்றுக்கணக்கான மாணவிகளுக்கு இன்னும்பரீட்சை முடிவுகள்தெரிவிக்கப்படவில்லையாம். இவர்களின் எழுத்துப் பரீட்சை முடிவுகளைத் தொடர்ந்தே செய்கைமுறைப் பரீட்சை நடப்பது வழமை. முடிவுகள் வெளிவராதகாரணத்தால்மார்கழிப் பரீட்சைக்கும் இவர்கள் மனுப்பண்ணியுள்ளனர்.

இவர்களுள் பெரும் பாலானோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர். இப் பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்து தென்னிந்திய இசைக் கழகங்களில் உயர்தர சங்கீதப் பயிற்சிக்குச் செல்ல விருந்த பல மாணவியர் இவ்வாண்டு தென்னிந்தியா செல்ல முடியாத நிலைமை உருவாகியுள்ளது. பல பெற்றோர் இவ்விடயம்பற்றி ஆட்சிமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ் ஆசனக்கோவில் திரு இருதயக்கூட்ட புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு பி. ஜே. அமிர்தநாயகம், உப தலைவர் திரு. எஸ். எம். ஜே, லூயிஸ், செயலாளர் திரு பசில் திசைவீரசிங்கி, உப செயலாளர் திரு ஏ. ரி. அலோசியஸ், தனாதிகாரி திரு எஸ் எல். அல்போன்சஸ்.

அன்பு வெளியீடு
விற்பனையாகின்றது!
ஐந்தாந்தர தமிழ் விளுப்பத்திரங்கள்
எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)
விலை: சதம் 60 மட்டுமே!
★ அரசாங்க திணைக்களப் பாடத்திட்டத்துடன் வெளிவந்துள்ள ஒரே ஒரு நூல்!
★ N. P. T. A. பரீட்சைக்கு உதவியானது.
விற்பனையாளர்:
அன்பு புத்தகசாலை, 27, டி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை 234, கே. கே. எஸ், வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபார்கான் உண்ணாவிரதம் பிரார்த்தனையுடன் முடிந்தது

## பல்வேறு தலைவர்களையும் சந்திக்க பாதுஷாகான் விருப்பம்

புதுடில்லி, அக். 6

எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் இன்று காலை 7 மணிக்குத் தமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

திரு. கபார்கான் தமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளும் பொழுது திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், திரு. பக்ருதீன் அலி முகம்மத் திரு. தீவாகர் போன்ற முக்கிய தலைவர்கள் அங்கு இருந்தார்கள்.

அப்துல் கபார்கான் பழரசம் அருந்தியதன் மூலம் விரதத்தை முடித்துக் கொண்டார். அவர் விரதத்தைக் கைவிடுவதற்கு முன்பு கம்பளத்தின் மீது அமர்ந்து, 'வன்செயல்கள் எல்லாம் ஒழிந்து போவதற்காக இறைவனுக்குப் பிரார்த்தனை செய்வோம்' என்று தீனக்குரலில் கூறினுர் அதையடுத்து அங்கு குழுமியிருந்த அனைவரும் ஐந்து நிமிடங்கள் மௌனப் பிரார்த்தனை செய்தார்கள்.

விரதத்தை முடித்துக் கொண்டு அவர் பேசுகையில், பல வேறுபட்ட மக்களையும் சந்தித்துப் பலவிஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்க விரும்புவதாகக் கூறினுர். நான் சேவை செய்யவே விரும்புகிறேன். மனித இனத்துக்குப் பணிபுரிவது உண்மையான தெய்வப் பணியாகுமென்ருர் பாதுஷாகான்.

### ஜெயப்பிரகாஷ் வேண்டுகோள்

கான் அப்துல் கபார்கானுக்கு பணமுடிப்புவழங்க விரும்பும் மக்கள் தொடர்ந்து பணம் வழங்கவேண்டுமென்று திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் வேண்டுகோள் விடுத்திருக்கின்ருர்.

கபார்கான் பிறந்தநாள் கொண்டாட்டக் கமிட்டியின் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் விடுத்துள்ள வேண்டுகோளில், திரு. கார்கான் இதுவரை பெறப்பட்டுள்ள பணத்தை உரியவர்களுக்குத் திருப்பிக கொடுத்துவிடும்படி பிரதமரிடமும் மற்றவர்களிடமும் கூறியிருப்பதாக அடிபடும் செய்திகள் தவறென்றும் காந்திஜியின் 75-வது வயதில் அவருக்குப் பணமுடிப்பு வழங்கப்பட்டதுபோல் கான் அப்துல் கபார்கானுக்கும் அன்பின் காரணமாக மக்கள் பணம் வழங்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தென். வியட்னும் தரைப்படைகள்

### கா ஓ. கி. தெரிவிக்கும் கருத்து

சைகோன், அக். 6

அடுத்த ஆண்டு இறுதிக்குள் தென்வியட்னுமில் தரைபடைகள் யாவும் தென் வியட்னுமியரைக் கொண்டதாக இருக்கும் என்று தென் வியட்னும் உப ஜனுதிபதி மார்ஷல் கா-ஓ-கீ கூறியிருக்கிருர். அமெரிக்க பத்திரிகையொன்று அளித்த பேட்டியில் அவர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கிருர்.

அமெரிக்கபடைகள் தென் வியட்னுமிலிருந்து வாபஸ் பெறுவது பல ஆண்டுகளுக்கு முன்பே இடம்பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட மார்ஷல் கா-ஓ-கீ இதற்கு முன்பு சைகோனில் இருந்த அமெரிக்கதூதுவரை அவர் குற்றஞ்சாட்டினுர்.

தென்வியட்னுமில் தரை நிலைகள் யாவையும் தென் வியட்னுமியரே பொறுப்பேற்ற பின்னர் அமெரிக்கர்கள் வெறும் மேற்பார்வையாளர்களாகவே இருப்பார்களென்று திரு கீ கூறியிருக்கிருர்.

பாரிஸ் அமைதிப் பேச்சுவார்த்தைகள் பற்றி அவர் குறிப்பிடுகையில் இத்தப் பேச்சுக்களினுல் பயன் ஏதும் விளையாது என்று தெரிந்தால் பேச்சுக்களை நிறுத்திவிடுவதற்கு தீர்மானிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிருர்.

அமெரிக்க பத்திரிகையொன்றுக்கு கொடுத்த பேட்டியில் இந்தக் கருத்துக்களை திரு கீ கூறியிருக்கிருர்.

# சைவசமய வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் ஆற்றிய தொண்டு

## அடிகளார் புகழுரை

கட்டைவேலி, திங்கள்

''சைவநெறியின் வளர்ச்சிக்கு இலங்கையை பொறுத்தவரை யாழ்ப்பாணக் குடாநாடு பெருந்தொண்டாற்றி வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் வாழும் பலருக்கும் யாழ்ப்பாண அறிஞர்கள் வழிகாட்டியாக இருந்திருக்கின்ருர்கள். சைவத்தின் பெருமரபைப் போற்றி பேணிப்பாதுகாக்கும் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை நோய் தீவிரம்பெற்று வருவது பெரும் அதிர்ச்சிக்கு இடமளித்துள்ளது'' இவ்வாறு கட்டைவேலி ஞானுசாரியார் பள்ளிக்கூடத்தில் சொற்பொழிவாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் தெரிவித்தார்

மனச்சாட்சி உள்ளவர்கள் மனதனை மனிதனுக மதிக்கும் மனிதப் பண்புள்ளவர்கள் சமத்துவ ரீதியில் தீண்டாமை என்னும் நோயை எதிர்த்து போராடவேண்டும் என்ருர். தொடர்ந்து பேசுகையில் நாட்டின்முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டில் நல்ல சமுதாயத்தை அமைக்கவும்தீண்டாமையை அகற்றி வருங்கால இளைஞர்கள் ஒன்றுபட்டுப்போராட வேண்டும். நல்ல சமுதாயத்தை அமைப்பதற்கு காந்தியடிகள் கடைப்பிடித்த அஹிம்சையை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும் மற்றவர்கள் நன்ருக வாழ்ந்தால் தான் நாமும் நன்ருக வாழமுடியுமென நினைத்தால் நாம் எப்பொழுதோ முன்னேறியிருப்போம்.

''தமிழினத்திற்கு மட்டுமன்றி, மனித குலத்திற்கே சாபக்கேடாக நிலவும் தீண்டாமையை ஒழிக்க மனிதாபிமானம் படைத்த ஒவ்வொருவரும் திரண்டு ஒரே குரலில் உரிமைக் கீதம் எழுப்பவேண்டிய அவசியம் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு இன்று ஏற்பட்டுள்ளது ஐ. நா. சபை உரிமைப் பட்டயத்தில் காணப்படும் அடிப்படை உரிமைகளை உணர்ந்து அவற்றைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அடையப் போராடவேண்டும். விஞ்ஞானத்தில் மனிதன் அடைந்த முன்னேற்றத்தை மெஞ்ஞானத்திலும் அடையவேண்டியது அவசியம்'' என்ருர் அடிகளார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ் சிவப்பிரகாசம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

''தீண்டாமையை ஒழித்துக்கட்ட மதம மாறுவது தவருன ஒரு மாற்று வழியாகும. எந்த மதமும் தீண்டாமையை ஆதரிக்கவில்லை. மாருக, ஒவ்வொரு மதமும் அன்பு, அறம், சகோதரத்துவம் ஆகிய உயர்ந்த தத்துவங்களையே போதிக்கின்றது. எனவே மதம் மாறுவதன் மூலம் தீண்டாமைப் பிரச்னையைத் தீர்ப்பதென்பது தலையிடி மாறுவதற்காகத் தலையணையை மாற்றிக் கொள்ளும் செய்கைக்கு ஒப்பாகும்'' என்று அடிகள் மேலும் பேசுகையில் கூறினுர்.

திரு. கே. கார்த்திகேசு நன்றி தெரிவித்துப் பேசினுர்.

## விஞ்ஞான வகுப்புகள்

பருத்தித்துறை, திங்கள்

க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்புகள் அடுத்தாண்டு மே மாதம் ஆரம்பமாகுமென்று தாம் முதல் அறிவித்த சுற்றுநிருபத்தைக் கல்விப்பகுதி ரத்துச்செய்துவிட்டு அவ்வகுப்புகள் அடுத்தாண்டு தைமாதம் ஆரம்பிக்கப்படலாமெனச் சகல அதிபர்களும் ஒரு புதியசுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

## திருநாள்

பச்சிலைப்பள்ளி. திங்கள்

கிளாலி அர்ச் மிக்கேல் சம்மனசனவர் திருநாள் கடந்த 20-ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் வேஸ்பரும் நடைபெற்றது பெரிய பாடற்பூசையுடன் முடிவுற்றது. ஆராதனைகளை வண. ஆர். கருணுகரன்சுவாமிகள்நிறைவேற்றினுர்.

0 0 0

கட்டைக்காடு அர்ச் சுப்பவேந்தி மாதா கோயிலில், அர்ச் திரேசம்மாள் திருநாள் நடைபெற்றுமுடிவுற்றது. ஆராதனைகளை தாளையடி கட்டளைக்குரவர் வண. ஏ. லெபோன் சுவாமியார் நிறைவேற்றினுர்.

# மது விலக்குக்கு பணம் கேட்பதின் காரணம்

## கருணுநிதி விளக்கம்

சென்னை, அக்-6

மதுவிலக்கை அமுல்நடத்துவதற்காக தமிழ் நாட்டுக்கு உதவிப்பணம் கொடுக்க டெல்லியிடம் போதிய பணவசதி இல்லையென்றுபிரதமர் இந்திராகாந்தி கூறியதைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் திரு கருணுநிதி 'காத்திருப்போம் காலம்மாறும் என்று கூறியுள்ளார்.

மதுவிலக்கை உண்மையாகவே கடைப்பிடிக்கிற மாநிலங்களுக்கு அவர்கள் தரவேண்டிய ஊக்கத்தை அளிக்க மறுக்கிருர்கள் என்பதே திரு கருணுநிதியின் குற்றச்சாட்டாகும்.

புதிதாக மதுவிலக்கை அமுல்செய்யும் மாநிலத்திற்கு மத்திய அரசு பணஉதவி செய்யுமெனக் கூறியுள்ளது.

இத்தனை செலவுக்குமாகவே டெல்லியிடம் பணம் கேட்கிறேன்,' என அவர் தெரிவித்தார்.

## லண்டன் சென்ருர்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வன் எஸ். இராஜேந்திரம் உபகாரச்சம்பளம் பெற்று லண்டன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கு உயர்தரக்கல்வி கற்பதற்காகச் சென்றுள்ளார்.

இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராகக்கடமையாற்றிய இவர்ஒரு சிறந்தவிளையாட்டுவீரருமாவம் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின்

# மாணவர் மத்தியில் அடிகள்விடுத்தகேள்வி

அராலி, ஞாயிறு

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு விஜயம்செய்தபொழுது இப்பகுதியிலுள்ள பல பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும்பல கிராம மக்களும் அவரை வரவேற்றனர். வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அடிகளார் தாம் பேசப்போவதில்லை

யாத சிறுபராயத்தினன் என்பதை அடிகளாரும் ஒப்புக் கொண்டு மனிதன் படைப்பில் மேலானவன் அவனுல் மலரையோ கனியையோ உற்பத்தி செய்துகொள்ள முடியும். ஆனல் இன்றுமனிதனை மனிதன் வெறுக்கிருன். காரணம் மனவேற்றுமை. திருப்பாற்கடல் என்பது ஒவ்வொருவனுடைய நெஞ்சுதான். இங்கு அவன் அன்பென்னும் அமுதத்தை

## வீடு உடைத்ததை ஒப்புக்கொண்டார்

மல்லாகம், திங்கள்

வீடுடைத்து களவாடிய குற்றத்தைஒப்புக் கொண்ட எஸ். தர்மலிங்கம் என்ற 18 வயது வாலிபருக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எஸ். ஆனந்தகுமாரசாமி ரூபா 200 அபராதம் விதித்ததுடன் நீதி மன்றம் கலையும் வரை சிறைத்தண்டனையும் விதித்தார்.

சுன்ஞகம் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்த இந்நபர் நீதிமன்றத்தால் ஏற்கனவே நன்னடத்தை பாதுகாவலில் செல்ல உத்தரவிடப்பட்டிருந்தவர்.

## பிரி - மந்திரி சபையில் திடீர் மாற்றம்

லண்டன். அக். 6

பிரிட்டிஷ் மந்திரிசபையை பிரதமர் வில்சன் மாற்றியமைத்திருக்கிருர்.

சமூக, பொருளாதார விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்வகையில், இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. புதிதாகவும் ஓர் அமைச்சை திரு. வில்சன் உருவாக்கியிருக்கின்ருர். என்ருலும் முன்னர் 23 பேராக இருந்த மந்திரிகளின் எண்ணிக்கையை 21 ஆக அவர் குறைத்திருக்கின்ருர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டி இந்த மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

திரு. வில்சனின் முக்கிய சகாக்களில் ஒருவரான திரு. ஜோர்ஜ் தொம்சனுக்கு ஐரோப்பிய பொது மார்க்கெட் சம்பந்தமான விஷயங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

## தீவுப்பகுதி ஆசிரியர் சங்கம தீர்மானம்

வேலணை, திங்கள்

தீவுப்பகுதி அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசியர் சங்கக் கூட்டம் திரு. வே. சிவலிங்கம் தலைமையில் கூடிய பொழுது முக்கிய விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

''தீவுப்பகுதியில் நிரப்பப்படாமலிருக்கும் உதவி ஆசிரியர், தலைமை ஆசிரியர் காலிஸ் தானங்களுக்குவேறு தொகுதியில் இருக்கும் ஆசிரியர்கள் இங்கு இடமாற்றம் பெற்றுவரக் கஷ்டப்படுவதால், வெளியிடங்களிலுள்ள தீவுப்பகுதி ஆசிரியர்களை இங்கு மாற்றஞ் செய்யவேண்டும்.

''தீவுப்பகுதி பின்தங்கிய தொகுதியாகையால் இப்பகுயில் காலியான இடங்களை நிரப்பாது, மீண்டும் அத் தொகுதியிலிருந்து வெளியி

# இந்திரா கன்னத்தில்

## இரவு நேரம் பாடசாலை வளவில் நின்ருராம்

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

சன் உருவாக்கியிருக்கின்றார். என்றாலும் முன்னர் 23 பேராக இருந்த மந்திரிகளின் எண்ணிக்கையை 21

கெட் சம்பந்தமான விஷயங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

# இந்திரா கன்னத்தில் மூதாட்டி முத்தம்

கோவை, அக். 6

பிரதம மந்திரி இந்திரா காந்தி கோவைக்கு வந்து சேர்ந்தபோது ஒருமூதாட்டி ஓடோடி வந்தார். பிரதமருக்காக பலத்த பொலிஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருந்தது. ஆனால் 87 வயதாகும் அம்மூதாட்டி பந்தோபஸ்துக்காக நின்றுகொண்டிருந்த பொலிஸாரை பொருட்படுத்தவில்லை.

பொலிஸ் கட்டுக்காவலையெல்லாம் மீறிக்கொண்டு, 'குழந்தையாக இருந்தபோதே பிரதமரை எனக்குத்தெரியும்' எனச் சொல்லிக்கொண்டே அம்மாது இந்திரா காந்தியை நோக்கி ஓடினார்.

மிஸ் அன்ன அன்ஹேரால்ட் என்ற அந்த டென்மார்க் மூதாட்டி பின்னர். பிரதமரிடம் ஓடிச்சென்று அவரது கைகளை பிடித்துக்கொண்டு சந்தோஷத்துடன் குலுக்கினாள். பிரதமரது வலது கன்னத்தில் முத்தமிட்டார். அப்போது மகிழ்ச்சியினால் அம்மூதாட்டியின் கண்களில் நீர் ததும்பி வழிந்தது.

அவர் 1937-ம் ஆண்டு முதல் 1954-ம் ஆண்டுவரை நேரு குடும்பத்தில் பணியாற்றியவர். நீலகிரியில் உள்ள கோத்தகிரியில் இப்போது அவர் குடியமர்ந்துள்ளார்.

இந்திராகாந்தி சந்தோஷத்துடன் அவரது நலன்களை விசாரித்தார்.

## பதவி ஏற்ற 6மாதத்திலேயே எதிர்ப்புத் தோன்றிவிட்டது

### இந்திரா காந்தி கூறியது

கோவை, அக். 6

''என்னுடைய தலைமைக்குத் தோன்றியுள்ள எதிர்ப்பு சமீபத்தில் ஏற்பட்டது அல்ல. நான் பதவி ஏற்ற ஆறு மாதத்திலேயே எனக்கு எதிர்ப்பு தோன்றிவிட்டது.'' இவ்வாறு கோவையில் நடைபெற்ற மகளிர் மன்றக் கூட்டத்தில் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், ''நாங்கள் சொல்வது போல நீங்கள் நடக்காவிட்டால் உங்களைத் தொடர்ந்து பதவியில் இருக்க விடமாட்டோம்'' என்று சிலர் கூறினர்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள் என்னை எதிர்க்கவில்லை. மக்களுடைய நன்மைக்காக நான் எடுத்துவரும் பல நடவடிக்கைகள் பிடிக்காததால் என்னை எதிர்க்கிறார்கள். கடந்த பொதுத்தேர்தலின்போது நான் ரஷ்யாவிடம் பணம் வாங்கியதாக சில வதந்தியைக் கிளப்பியுள்ளனர். இது சுத்தப் பொய். இதை நான் அடியோடு மறுக்கிறேன்'' என பகிரங்கமாகக் கூறினார்.

## ஜெகஜீவன்ராம் சுகவீனம்

புதுடில்லி, அக். 6

சுகவீனமுற்றிருந்த இந்திய உணவு மந்திரி ஜெகஜீவன்ராம் இப்போது குணமடைந்து வருகிறார். சுகவீனம் காரணமாக அவரது பம்பாய், பூனா பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நன்கு குணம் அடைந்ததும் இவர் காசியில் நடக்க இருக்கும் காந்தி நினைவு நாள் கூட்டத்தில் பேசுவார்.

## இந்திரா புதுச்சேரி விஜயம்

புதுச்சேரி, அக் 6

இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தபோது கடுமையான மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் ஏராளமானவர்கள் குழுமியிருந்து அவரை வரவேற்றார்கள். புதுச்சேரி லெட்டினன்ட் கவர்னர் திரு. ஜட்டியும், முதலமைச்சர் திரு. பரூக் மரைக்காயரும் மழையில் நனைந்தபடி பிரதமரை காத்திருந்து வரவேற்றனர்.

படுவதால், வெளியிடங்களிலுள்ள தீவுப்பகுதி ஆசிரியர்களை இங்கு மாற்றஞ் செய்யவேண்டும்.

''தீவுப்பகுதி பின்தங்கிய தொகுதியாகையால் இப்பகுதியில் காலியான இடங்களை நிரப்பாது, மீண்டும் அத்தொகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு ஆசிரியரை மாற்றுவதால் கல்வித்தரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. ஆகையால் இப்பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு ஆசிரியர்களை மாற்றும் பொழுது காலியாகும் இடங்களை நிரப்பிய பின் மாற்றம் செய்தல் வேண்டும்.''

விவசாயப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு விசேஷ சகாய நிதியும், பதவி உயர்வும் சலுகையும் அளிக்கப்படவேண்டுமென கல்வி மா அதிபரைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

களவுபோன

## பொருளை வைத்திருந்த மூவரும் குற்றவாளி

மல்லாகம், திங்கள்

களவுபோன நீர்இறைக்கும் இயந்திரத்தை வைத்திருந்த மூவரையும் குற்றவாளிகளாகக்கண்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முதல் எதிரியை ரூபா 100 அபராதம் செலுத்தும்படி தீர்ப்பளித்தார். இரண்டாம் மூன்றும் எதிரிகளை தலா 3 வருட கால நன்னடத்தைப் பாதுகாவலிலும், தலா 20 ரூபா முடிக்குரிய செலவு வழங்கவும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் மல்லாகத்தைச்சேர்ந்த இரத்தினம், அப்புத்துரை, செல்வராசா, ஆகிய மூவரும் சுன்னாகம் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தனர். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் சிவசிறீதரன் ஆஜரானார்.

## பஸ் பிரயாணிகள் கஷ்டம் நீங்கியது

பச்சிலைப்பள்ளி, திங்கள்

பருத்தித்துறை-தாளையடி, பருத்தித்துறை ஆழியவளை பஸ் பிரயாணிகள் அனுபவித்து வந்த கஷ்டம் இம்மாதம் தொடக்கம் நீங்கியுள்ளதாம். பழைய அட்டவணைப்படி இ. போ. ச பஸ் சேவை நடைபெறுவதே இதற்குக்காரணமெனக் கூறப்படுகிறது.

வேண்டிய ஊக்கத்தை அளிக்க மறுக்கிறார்கள் என்பதே திரு கருணாநிதியின் குற்றச்சாட்டாகும்.

புதிதாக மதுவிலக்கை அமுல் செய்யும் மாநிலத்திற்கு மட்டுந்தான் டெல்லி அரசு பணஉதவி செய்யுமெனக் கூறியுள்ளது.

மதுவிலக்கை எடுத்துவிட்டு அதனால் கிடைக்கக்கூடிய 40கோடி ரூபாயை சேரியில் வாழ்வோர் நலனுக்காக கொலனி அமைப்பது தான் சிறந்த செயல் அல்ல. மதுவிலக்கை எடுத்து விட்டுத்தான் இந்த நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதல்ல. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 2 லட்சம் 3லட்சம் மக்கள் மதுவிலக்கு குற்றங்களுக்காக கைது செய்கிறார்கள். இவர்களை ஜெயிலில் வைத்து அரசாங்கம் சோறு போடுகிறது.

யர்தரக்கல்வி கற்பதற்காகச் சென்றுள்ளார்.

இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராகக்கடமையாற்றிய இவர்ஒரு சிறந்தவிளையாட்டுவீரருமாவர்.

வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏயர். சபாரத்தினம் தம்பதிகளின் புதல்வராவார்.

## இடமாற்றம்

சங்கானை, திங்கள்

சங்கானை பொலிஸ் சார்ஜன்லந்திராவாகனப்பயிற்சி பெறுவதற்கு கொழும்பு சென்றுள்ளதின் காரணமாக பொலிஸ்சார்ஜன் எஸ் முத்துக்கிருஷ்ணன் காங்கேசன்துறை பொலிசிலிருந்து சங்கானைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

# ஈழநாடு

## விபுலானந்தர் சிறப்பிதழ்

- O கலாநிதி க. கைலாசபதி
- O கலாநிதி சு. வித்தியானந்தன்
- O பண்டிதர் செ. பூபாலபிள்ளை
- O திமிலைத்துமிலன்
- O புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
- O ம. சற்குணம்

ஆகியோரின் கட்டுரைகள், கவிதைகள்.

அத்துடன் ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் பாராட்டுப் பெறும் ச. ம. அச்சுதனின்

'அவருக்கும் முட்டை வேணும்'

(சிறுகதை)

- O நாடகம்
- O சங்கிலியம் (தொடர் காவியம்)
- O குடும்பச்சுடர்
- O கலை அரங்கம்
- O மாணவர் மலர்
- O அரசியல்நிருபர் எழுதும் வாரசாரம்
- O படக்கதை
- O உலக மேடை

ஆகிய வழமையான அம்சங்கள்.

**வாங்கிச் சுவைக்கத் தவறுதீர்கள்**

## ஈழநாடு

**10—10—69 வாரமலர்**

பக்கங்கள் — 16 விலை சதம் —20

விஜயம்செய்தபொழுது இப்பகுதியிலுள்ள பல பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும்பல கிராம மக்களும் அவரை வரவேற்றனர். வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அடிகளார் தாம் பேசப்போவதில்லையென்றும் மாணவரை பேச வைக்கப் போவதாகவும் கூறி சில வினக்களை கூறி மாணவர் விடையளிக்குமாறு கேட்டுக்கொண்டார். மலர், கனி மனிதன் இம்மூன்றில் அதிகம் விரும்பத்தக்கதெது என கேட்டவினுவிற்கு மனிதனே விரும்பத்தக்கவனென்று ஓர் மாணவன் விடையளித்தான் ஆனால் அவன் விளக்கமுடி

மலரையோ ... உற்பத்தி செய்துகொள்ள முடியும். ஆனால் இன்றுமனிதனை மனிதன் வெறுக்கிறான். காரணம் மனவேற்றுமை. திருப்பாற்கடல் என்பது ஒவ்வொருவனுடைய நெஞ்சுதான். இங்கு அவன் அன்பென்னும் அமுதத்தை கடைந்தெடுத்து உயர்வு தாழ்வு, ஏழை, தனவந்தன் என்ற வேற்றுமைகளைகளைந்தெறிந்துவிட்டு தன்னுள் உள்ள அன்பை துன்பத்திலாழ்ந்துழலும் சகமனிதன் மேற்செலுத்தி இரக்கமேலீட்டால் கண்ணீர் சொரிந்து அந்நீருருவாக அன்பின் உருவை காட்ட வேண்டும்' என்றார்.

## 'தமிழ்நாட்டில் மதத்துக்கு கூடிய அந்தஸ்து உண்டு'

### பருத்தித்துறையில் அடிகளார்

உடுப்பிட்டி, திங்கள்

தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் நாஸ்திகம் பரவிவிடும் என்றும், ஆலயங்களின் நிர்வாகம் சீர் கெட்டு விடும் என்றும் பயந்து கொண்டிருந்த சிலருக்கு அண்ணாவின் ஆட்சியில் தான் மதத்துறைக்குக் கூடிய மதிப்பும் கௌரவமும் வழங்கப்பட்டிருப்பது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியாகும். தமிழகத்தில் இன்றுமதம் உயர்ந்த அந்தஸ்தில் பேணப்படுகின்றது.

மேற்கண்டவாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார். பருத்தித்துறை சதாவதானம் கதிரவேற்பிள்ளை கலாமன்ற ஆதரவில் இக் கூட்டம் நடைபெற்றது.

குன்றக்குடியடிகளார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''திருக்குறள் உலக மக்களுக்காக எழுதப்பட்ட ஒரு வழிகாட்டிநூல் குறளில்லாத விடயங்கள் ஒன்றும் இல்லை. அரசியல் ரீதியிலும் சரி, பொருளாதார ரீதியிலும் சரி, மதரீதியிலும் சரி, திருக்குறள் உலக மக்களின் வாழ்க்கை எப்படியமைய வேண்டுமென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

இதனால் தான் குறள் உலக மக்களுக்கு உரிய ஒரு பொதுச் சொத்தாக விளங்கி வருகின்றது. மேடையில் ஏறிநின்று அழகாகப் பேசுவதுடன் மட்டுமே நாம் நின்று விடுகின்றோம். ஆனால் செயலில் நாம் செய்வது முற்றிலும் மாறானதாகவே இருக்கின்றது. வள்ளுவம் பற்றி எங்கும் பேசிக் கொள்ளப்படுகின்றது ஆனால் வள்ளுவர் காட்டிய வழியில் நடப்பவர்கள் எத்தனைபேர் எனக் கணக்கிட வேண்டும்.

'தீண்டாமையைப் பற்றி இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே வள்ளுவர் கூறியிருக்கின்றார் ஆனால் இன்னும்தீண்டாமை ஒழிந்தபாடில்லை. இங்கு சாதியின் பெயரால் நடைபெற்ற கலவரங்கள் எத்தனை? இன்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயங்களின் உள்ளே செல்ல முடியாமல் உரிமை மறுக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம் எனவே நாம் எம்மைத் திருத்திக் கொள்ளாமல் வள்ளுவர் பற்றிப் பேசுவது வீணானது'' என்றும் கூறினார்.

திரு. மு பொ. வீரபாகு தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. பருத்தித்துறை மாநகரசபைத் தலைவர் திரு. என். நடராசா உட்பட வேறுபலரும் பேசினர். கதிரவேற்பிள்ளை கலாமன்றத்தினரால் பிரசுரிக்கப்பட்ட கதிரவேற்பிள்ளை நினைவு மலரின் சில பிரதிகள் அடிகளாரிடம் அன்பளிப்பாகவழங்கப்பட்டன.

ஏற்கனவே நன்னடத்தை பாதுகாவலில் செல்ல உத்தரவிடப்பட்டிருந்தவர்.

இரவு நேரம்

## பாடசாலை வளவில் நின்றாராம்

மல்லாகம், திங்கள்

சந்தேகத்திற்கு இடமாக காரணமின்றி பாடசாலை வளவுள்ளே இரவு நேரம் நின்ற எஸ். சின்னத்தம்பி (வயது 20)என்ற வாலிபர் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் கைவிரல் அடையாளம் பதிவு செய்ய உத்தரவிட்டு தீர்ப்புவழங்குவதை இம்மாதம் 12ம் திகதிவரை ஒத்திவைத்து சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## ''வேலை வழங்கவும்''

வெள்ளவத்தை, திங்கள்

யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் பகுதி நேர மின்சாரக் கம்பியிணைத்தல், மோட்டார் இயந்திர வேலைகள் என்பன போன்ற தொழிற் பிரிவுப் போதனையினங்களில் பயின்று சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புகள் வழங்கும்படி கோரும் கடிதமொன்றைக் கொழும்பில் உள்ள யாழ். தொழில் நுட்பக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் செயலாளர் திரு. க. பேரம்பலம் தொழிலதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## நூல்நிலையம் அமைக்க முயற்சி

முசலி, திங்கள்

நானாட்டான் கிழக்கு(முருங்கன்) கிராமசபை தனது எல்லைக்குள் ஒருநூல்நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுத்துவருகின்றது. இதற்கான காணி கோரி, காணி சுவீகரிப்பதற்கான முயற்சியில்மன்னார்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினம் டான்போத் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். நூல்நிலையம் அமைக்கும் முயற்சியில் கிராமசபைத் தலைவர் திரு. லோ. அந்தோனிப்பிள்ளை தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

'மனச்சாட்சியின் குரலே ஆண்டவனின் குரல். ஒவ்வொரு செய்கையும் எண்ணமும் சரியா என்று அறுதித் தீர்ப்பு வழங்குவது அதுதான்.'

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 21-ந் திகதி (7 - 10 - 69)


## ஹரிஜனங்கள் பிரச்னே

மகாத்மா காந்தியின் நூற்ருண்டு ஜயந்திவிழா ஈழத்திலும் பல இடங்களிலே இப்போது நடைபெற்று வருகின்றது அடிகளின் குணதிசயங்களேயும், சாதனைகளேயும் பலரும் போற்றுகின்றேம். அவர் நமக்குக் காட்டிய வழிகளேக் கூடுமானவரை பின்பற்றவேண்டுமென்றும் பலரும் அறிவுறுத்துகின்றனர். அவற்றில் இன்று ஈழத் தமிழகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பது, தீண்டாமைஒழிப்பு உள்ளிட்டு ஹரிஜனப் பிரச்னே யாகும்.

தீண்டாமையும், சாதிக் கொடுமையும் இந்து சமூகத்தை ஒழியச் செய்வதாகவும், இந்துசமூகம் மீண்டும் தலைதூக்கிச் சிறப்படைய வேண்டுமாயின், இந்தத் தீமைகள் ஒழியவேண்டுமென்றும் மகாத்மா கூறியதுடன் மட்டுமல்லாமல், ஹரிஜனங்களுக்காக உண்ணுவிரதம் இருந்து அச் சமூகத்துக்கு இந்தியச் சட்டசபைகளிலே விசேஷ பிரதிநிதித்துவம் இடைக்கச்செய்தார். ஆலயப்பிரவேசத்திலே அச் சமூகத்தினருக்கு இருந்த தடையை நீக்கச் சட்டம்செய்யச் செய்தார். சட்டம் நிறைவேறி, பல ஆலயங்களும் அங்கு திறக்கப்பட்டுவிட்டன. என்ருலும் மக்களின் மனக்கதவுகள் திறக்கவில்லையென்றும், சாதி வேற்றுமைகளும் உயர்வு தாழ்வு எண்ணங்களும் இன்னும் அங்கு இருந்து இந்துசமூகத்தை வளரவிடாது தடுப்பதாகவும் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் இங்கு பல கூட்டங்களிலும் பேசி, ஈழத்திலும் இந்துசமூகத்திலுள்ள தீண்டாமை, சாதிக் கொடுமை எனும் தீமையை ஒழிக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தி வருகின்ருர்கள்.

இவ் விஷயமாக பொது மக்களிடையே மனமாறுதல்கள் மெதுவாக ஏற்பட்டு, சில முக்கிய கோயில்கள் இங்கும் திறக்கப்பட்டுள்ளன வென்ருலும், சாதியின்துப் பிளவுபடுத்தி இருப்பது தான் என்பதையும், சைவ சமயத்திலிருந்து வேறு சமயங்களுக்கு மதம் மாறுவதற்கும் சைவ ஆலயங்களிலே அச் சமூகத்தவரை ஒதுக்கிவருவதுமே என்பதையும் மறுப்பதற்கில்லை. தீண்டாமையும் சாதிக்கொடுமையும் மனிதனுக்கு மனிதன் செய்யும் பெரும் பாவம் என்ருர் மகாத்மாகாந்தி அடிகள். அந்தப் பெரும் பாவத்தின் பயன்தான் இந்து தமிழ்ச் சமூகம் இன்று பல வகைகளிலும் தாழ்வுற்றிருப்பதற்குக் காரணமாகும்.

சாதிப் பாகுபாடுகள் ஆதிகாலத்திலேயே ஏற்பட்டவை என்றும், அது அவரவர் தலைவிதியென்றும், கோயிலுக்குள் சில சாதியினரை அனுமதிப்பதற்கு ஆகமம் இடமளிக்கவில்லையென்றும் சிலர் வாதிக்கின்றனர். கடவுளும், சமயமும், மக்களுக்காகத்தான். இது ஜனநாயக யுகம். மன்னர்கள் மாறி, மக்களே ஆட்சியை நடத்தும் காலம் இது. மக்களிடையே வேற்றுமைகளே எவ்வகையிலும் காட்டுவதை மக்கள் சகிக்கமாட்டார்கள். எல்லா உயிர்களிலும் இறைவன் உயிருக்கு உயிராக இருக்கின்ருரென்ற சமய உண்மையை நம்புபவர்கள் தீண்டாமை வழக்கத்தை எக்காரணம்பற்றியும் ஆதரிக்கமாட்டார்கள். சிவாகம பூஷணமாகிய நயினை பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்களவர்கள், ஆலயப் பிரவேச இயக்கத்தைப் பலமாக ஆதரித்து புங்குடுதீவு மகாத்மா ஜயந்திக் கூட்டத்தில் பேசி வற்புறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது

இதேசமயம் ஹரிஜனங்களுக்கு பார்லிமெண்ட், செனட்சபை முதலிய பிரதிநிதி ஸ்தாபனங்களில் விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்பது மகாத்மா காட்டிய வழி. இப்போது செனட்சபைக்கு தென்னிலங்கையிலுள்ள ஒரு தாழ்த்தப்பட்டவரை நியமிக்க பிரதமர் டட்லிசேனநாயகா உத்தேசித்திருப்பதாக ஒரு

# கலையின்பத்தைச் சுவைக்க மாணவர்க்கு வழி காட்ட வேண்டும்

[சில தினங்களுக்கு முன்னர் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் சித்திர ஆசிரியர்கள் மத்தியில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர் நிகழ்த்திய உரையின் சாரம் இது.]

ஏ. ஈ. தம்பர்

[யாழ். மத்திய கல்லூரி முன்னுள் அதிபர்]

கல்வியின் பெருநோக்கங்களை நாங்கள் ஆதரிப்பதாலுல் நமது பாடத் திட்டங்களை கல்வியூட்டும் முறைகளிலும் சில அம்சங்கள் அத்தியாவசியம் எனக்கருத வேண்டும். மாணவ மாணவிகளின் சாத்வீக உணர்ச்சிகளேயும் பேரின்பம், கலை இன்பம் சுவைக்கும் தன்மைகளைத் தூண்டி உள்ளம் மகிழ்வுற புனித லட்சணங்கள் செறிந்த செல்வர்களாக ஆகக்கூடிய கல்விமுறைகள் அனுசரிக்கப்படவேண்டும். இலக்கியம், கவிதைகள், சிற்பம், சித்திரம் கற்பிக்கும் பாடத்திட்டங்களிலும் முறைகளிலும் ரசானுபவம் பெறக்கூடியவர்களாயும் கலையின்பம் பெறக்கூடியவர்களாயும் மாணவர்களின் மனோநிலையை சிருஷ்டிக்க வேண்டும். ரசானுபவம் பிரமாணுபத்து கு இந்திய நாகரிகத்தில் கருதப்பட்டு வந்தது. "Beauty is truth and truth is beauty" அழகே சத்தியம் சத்தியமே அழகு என்றும் மேல்நாட்டுப் புலவர் Keets கூறியிருக்கின்ருர். எங்கள் பள்ளிக்கூடங்கள் சித்திரம் கற்பிக்கும் திட்டங்களிலும் முறைகளிலும் அழகான படிவங்களை வரைவது மாத்திரமல்ல அழகான சித்திரங்கள் ததும்பும் கலையின்பத்தைக் கொடுக்கும் சித்திரவடிவங்களை சுவைக்க வழிகாட்டவேண்டும். உண்மையாக சித்திரம் வரைந்து படிப்பவர்களாலுல் அவர்கள் ரசானுபவ சிருஷ்டியில் செல்பவர்களாயிருக்கவேண்டும்.

இத்தகைய நோக்கங்களை நாங்கள் நிறைவேற்றவேண்டுமாலுல் சித்திரம் கற்பிக்கும் முறைகளிலும் சில திருத்தங்கள் செய்வது உசிதம் இம்முறை இங்கு நடந்த ஆசிரிய ஆலோசகர் வகுப்புகள் மெச்சக்கூடியது. ஆலுல் இப்பேர்ப்பட்ட ஆலோசகர் வகுப்புக்களில் ஆலோசகர்களுக்கு படக்காட்சிகள் மூலமாகவும் உபந்நியாசங்கள் மூலமாகவும் உலகத்தின் கண்ணேபான்மையுடையவர்களாய் தாங்கள் அனுபவித்த செல்வங்களை மற்றவர்களுக்கும் ஊட்டும் சித்தர்களாக வர வேண்டும். இத்தகைய ஆசிரியர்கள் வரையும் திறமையில் மாத்திரம் தேர்ச்சி அடைந்தவர்களாய் இல்லாமல் சாத்வீக உணர்ச்சிகள் உள்ளவர்களாய் மாணவர்களும் அவர்கள் உள்ளத்தில் பெரும் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியவர்களாக இருக்கவேண்டும், யாழ்ப்பாணத்தில் ஒரு படக்காட்சி மாளிகை அத்தியாவசியம். உலகத்தில்வரையப்பட்ட பெருஞ் சித்திரங்களை விலைக்கு வாங்கிவைக்கக்கூடிய பண வசதி இல்லாதவர்களாயிருப்பதால் அப்பெருஞ் சித்திரங்களின் வர்ணப் பதிப்புகளேயாகுதல் வாங்கி காட்சிக்குவைக்கக் கூடிய ஒரு படக்காட்சிக் கூடம் ஒன்று அத்தியாவசியம். இதைவிட ஓவிய பிலிம் காட்சிகளாலும் படக் கண்ணுடிக்காட்சிகளாலும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உலகத்தில் பண்டு தொட்டு விஸ்தரிக்கப்பட்ட ரசானுபவம் ததும்பும் படங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் பார்த்து ரசிக்கக்கூடிய வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

தமிழர்களாகிய நாங்கள் எங்கள் சமுதாய வாழ்க்கை முறையில் சமயத்துக்கும், கலைக்கும் பெருமிடம் அளித்துவந்தவர்கள், எந்த எளிய இல்லத்திலும் பாவிக்கும் பொருட்கள் அழகு வடிவம் உடைய பொருட்களாகவே இருக்கும். அவர்களுடைய ஆடை, ஆபரணங்கள், அடுக்களைப் பொருட்கள், விளக்குகள், சட்டங்கள் பிறநாட்டவர் அழகிய பொருட்கள் என்று வாங்கக்கூடியவை. தமிழர்களது இல்லத்திலும் அரசர்கள் மாடமாளிகைகளிலும், கோவில்களிலும் சிற்ப சித்திரப் பொருட்களை அலங்காரத்துக்கு மாத்திரமல்ல ஒருவரின் சீவியத்தில் சாத்வீக தெய்வீக உணர்ச்சிகளை தூண்டுவதற்கும், அமைதியையும் சாந்தத்தையும் அளிப்பதற்கும் உபகரணங்களாகக் கருதப்பட்டு அமைக்கப்பட்டு வந்தன ஆகையினுல் எங்கள் இல்லங்இல்லங்களிலும், குடிசைகளிலும் மங்கள தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும் வரையும் கோலவடிவங்களை அழியவிடக்கூடாது. பள்ளிக்கூடமாணவர்களுக்கு இக் கோலங்கள்வரையும் கைப்பயிற்சி வழங்கப்படவேண்டும். பிறநாடுகளில் சிற்ப ஓவியவடிவங்கள் அமைப்பவர்கள் தங்களுக்கு உபகரணங்களாக வடிவம் பொருந்திய உயிர்ப் பொருட்களையும் வேறு அழகான உருவங்களையும் தங்கள் முன்னேவைத்து சிற்ப ஓவிய வடிவங்கள் அமைத்து வந்தார்கள். ஆலுல் தமிழ் நாட்டிலும், பாரத நாட்டிலும் சிற்ப ஓவிய நிபுணர்கள் பிரத்தியட்சமாக கண் முன்னே காணும் காட்சிகளின் படிவங்களை அமைப்பதிலும் அவ்வடிவங்களைப் பார்த்து அமைக்கும்முறைகளை மாத்திரமே அனுசரிக்கவில்லை. பாரதநாட்டு சிற்ப ஓவிய நிபுணர்கள் தாங்கள் வடிவங்கள் அமைக்கும் முறையிலும் தியானத்தையும் தியானமந்திரங்களேயும் உபயோகித்து வந்தார்கள். சிற்ப சாஸ்திரங்களில் சிற்பியானவன் சிற்ப வடிவங்களை அமைக்குமுன் அனுசரிக்க வேண்டிய முறைகளை விரிவாக சஸ்கிருத நூல்களிலும் வேறு ராசானுபவ சாஸ்திரங்களிலும் கூறியிருக்கிருர்கள். சிற்பிகளும் ஓவிய நிபுணர்களும் தங்கள் புனித வாழ்க்கையினுலும் சில தியான முறை அனுசரித்துத் தாங்கள் சமர்ப்பிக்க எண்ணும் சிற்ப ஓவிய வடிவங்களை தங்கள் உள்ளத்திலோர் காட்சியாக கண்டு அனுபவித்துத் தங்கள் உள்ளக் காட்சியையே உருவங்களாகவும், ஓவிய வடிவங்களாகவும் சமர்ப்பித்தார்கள். நடராஜ வடிவத்தையும், சுந்தர மூர்த்தி சுவாமி உருவத்தையும்செதுக்கிய சிற்பிகள் தங்கள் முன்னே ஒரு மாதிரிகளேயும் வைத்து உருவாக்கும் சம்பிரதாயம் இருந்ததில்லை. இது போன்ற சிற்ப ஓவிய வடிவங்கள் கலைஞனின் உள்ளக்காட்சிகளை வர்ணத்திலும் உருவத்திலும் படைத்த நிபுணர்களின் படைப்பாகவே இருந்தன ஓர் அழகுக்கு தற்காலத்தின் நிலமும், நவீன சிற்பமும் ஓவியமும் (Modern sculpture and painting) கலைஞனின் உள்ளத்தில் ததும்பித் தோன்றும் காட்சிகளே சிற்பமும் ஓவியமுமாக படைக்கும் முறை கையாளப்பட்டுவருகிறது.

ஆகையினுல் சிற்ப ஓவிய ஆசிரியர்களும் மாணவர்களும் புனித வாழ்க்கை அனுசரித்து தியானத்தாலும் அமைதியாலும் தங்கள் உள்ளத்தில் நல்லெண்ணங்களும் வடிவங்களும் தோன்ற முயற்சி செய்ய வேண்டும். அமைதியும் உயிரும் உள்ள சிற்ப ஓவிய வடிவங்கள் அமைக்கும் திறமை வாய்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் உள்ளத்திலும் அமைதியும் சாந்தமும் நிலைக்கமுயற்சிசெய்ய வேண்டும். பாரத நாகரிகத்தின் அடிப்படைப் பண்பாடு புனித வாழ்க்கையாலும் குரு பரம்பரையில் பெற்ற சாந்த குணதிசயங்களாலும் சாத்மீககுண சீலர்களாக வாய்ந்து கலைகளை படைத்து கலையின்பத்தையும் ராசானுபவத்தையும் சுவைத்து தங்கள் வாழ்க்கையைப் பண்படுத்தி வந்தார்கள். இந்தப் பரம்பரைப் பண்பாட்டை கலை ஆசிரியர்களும் மாணவர்களும் முயற்சிசெய்து அனுசரிக்க வேண்டும்.

# நாவலர் கண்காட்சி நவம்பரில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருந்த நாவலர் நூல் கண்காட்சியும், நாவலர் விழா திரைப்பட, புகைப்படக் காட்சியும் அடுத்தமாதம் 29-ம் திகதிவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. நவம்பர் 29-ம் திகதியிலிருந்து டிசம்பர் 5-ம் திகதிவரை நாவலர் வாரம் அனுஷ்டிக்கப்படும். நல்லூரில் நாவலர் சிலையுள்ள மண்டபத்தில் 65 வயி

# ஐயாறன் எழுதுவது

இம்முறை கொழும்புக்குச் சென்றிருக்கையில் நம்ப முடியாத ஓர் அதிசயத்தைக் கண்டேன். ஆவி உலகத்திலுள்ள இறந்தவர்களுடன் பேசுவதில் கண்ட ஒரு புதுமைதான் அது. சொல்லட்டுமா?

மதுரை குருமகாசந்நிதானம் 'இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்' என்று ஒரு நூல் எழுதியிருப்பதைப்பற்றி இப்பத்தியிலே குறிப்பிட்டிருந்தேன். இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட பெரியோர்களின் ஆவிகளுடன் பேச முடியாதென்று அவர் அந் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆலுல்மீரிகாமத்திலிருந்து ஓர் அன்பர் சென்றவாரம் கொழும்புக்கு வந்து, தனது புதல்விமூலம் இறந்த எல்லாப் பெரியவர்களின் ஆவிகளும் பேசுவதாயும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், ஆறுமுகநாவலர் பெருமான், யோகர் சுவாமிகள், மகாத்மாகாந்தி இவர்களும் கென்னடி, அண்ணுதுரை, என். எஸ். கிருஷ்ணன் முதலியவர்களும் பேசுவதாயும், என்னையும்வந்து இந்த அதிசயத்தைப் பார்க்கும்படியும் வற்புறுத்தி அழைத்தார். அந்த அன்பர் நல்ல அறிவாளி. பூரண தெய்வ நம்பிக்கையுள்ளவர். பொய் கூறமாட்டார்.

தெய்வத்துடன் கலந்துவிட்டவர்கள் ஆவீ உலகத்திலிருந்து பேசமாட்டார்களென்ற மேற்படி நூலில் எழுதியுள்ளதை எடுத்துக் கூறினேன். அதைப்பற்றியும் நேரில் வந்து கேட்கும்படி அன்பர் கூறவே அவருடன் சென்றேன்.

புனிதமான பூசை அறைக்கு வெளியே சுமார் 16 வயதுள்ள செல்வி வித்தகம் மூலம் போர்டு பலகையில் அச்சமயம் யரோ ஒரு பெரியார் ஏதோ மருந்து விபரங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதாகச்சொன்னுர்கள். அந்த வீட்டில் ஒரு பையனுக்கு சுகமில்லை. அதற்கான மருந்தைச் செய்யும் விபரங்களைப் போர்டு பலகை மூலம் 'பெரியவர்' சொல்லியதை எழுதிக் கொண்டிருப்பதைக் காண வியப்பாக இருந்தது. அந்த விவரப்படி மருந்தைச் செய்து போட்டதில் அப் பையன் இரண்டு நாளில் பெரிதும் குணமடைந்துவிட்டதைப் பார்த்தேன்.

0 0 0

பின்னர் கென்னடியின் ஆவி வந்து பேசுவதைக்ஆண்டவனுடன் இரண்டறக் கலந்துவிட்டவர்கள், உங்களுடன் பேசுவது இல்லை என்று திரு. மதுரை ஆதீனம் திருப்பெருந்திரு திருவருள்தவயோகி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமி அவர்கள் எழுதியிருப்பது சரிதான். அதாவது உங்களுடன். ஆலுல் இங்குள்ள செல்வி வித்தகத்துடன், அவர்கள் எல்லோரும் பேசுவார்கள். காரணத்தை விளக்கிக் கூறி விடுகிறேன்

திரு மதுரை.........சுவாமி அவர்களுக்கேவித்தகத்தைப் போல் ஒரு மீடியம் இதுவரை கிடைக்கவில்லை. அதலுல் தான் அவர்கள் அப்படி எழுதியிருக்கிருர்கள். இங்கு ஆண்டவனுடன் இரண்டறக் கலந்திருப்பவர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டுபேச அங்கு அவர்களுக்குத் தகுந்த மீடியம் இருக்க வேண்டும். செல்வி வித்தகம் சாதாரணமான குழந்தை அல்ல அவளைப் பற்றி இப்போது இவ்வுலகுக்கே எங்குமே தெரியாது. அவளுடைய பெருமை புண்ணிய நிலை இன்னும் பலவிருக்கின்றன. வார்த்தைகளால் சொல்ல முடியாது. அப்படிப்பட்டவருடன் எல்லாப் பெரியவர்களும் கருணை கூர்ந்து அன்புடன் பேசுவார்கள்.......இந்த அற்புதக் குழந்தையைப் பற்றி திரு. மதுரை.........சுவாமி அவர்களுக்கே இனிமேல் தான் தெரியபோகிறது. அவர்கள் தந்தையுடன் அவர்களுக்கே பேசமுடியாமல் இருந்தது. அவர்களுடன் இக் குழந்தையின் புண்ணிய மீடியத்திலுல் பேசினுர்கள்."

0 0 0

மகாத்மாகாந்தி உள்ளிட்டு பல பெரியார்களும் பேசியுள்ள விவரங்களைக் கேட்டேன். இதுபற்றி "ஈழநாடு" வாரப்பதிப்பில் தொடர்ந்து எழுதவேண்டுமென்று உத்தரவும் போர்டு மூலம் கிடைத்தது. எழுதட்டுமா? தயவுசெய்து கடிதமூலம் எனக்குத் தெரிவியுங்கள். உங்கள் விருப்பத்தை அறிந்து எழுதக் காத்திருக்கிறேன்.

0 0 0

தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்கினுஞ் தொண்டர் தருகிலாய், பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்ப் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும் சோறும்கூறையும் ஏத்தலாம் இடர் கெட

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கொடுமை எனும் தீமையை ஒழிக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தி வருகின்றனர்கள்.

இவ் விஷயமாக பொது மக்களிடையே மனமாறுதல்கள் மெதுவாக ஏற்பட்டு, சில முக்கிய கோயில்கள் இங்கும் திறக்கப்பட்டுள்ளனவென்றாலும், சாதியின் பெயரால் மனிதர்களிடையே உயர்வுதாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை இந்தியாவைப்போல் இங்கும் துரதிருஷ்டவசமாக இன்னும் இருந்துவருகின்றது. பல தலைமுறைகளாக ஊறிவிட்ட இந்த வழக்ககம் திடீரென நீங்குவதென்பது கஷ்டம் தான். சட்டத்தால் மட்டும் இதை நீக்கிவிடமுடியாது. என்றாலும் இன்று அரசியல் முதலிய பல துறைகளிலும் தமிழ்மக்களின் தாழ்ந்த நிலைக்குக்காரணம், தமிழர்களிடையிலேயே அன்பும், ஒற்றுமையும் இல்லாதபடி, சாதி உயர்வு தாழ்வு எண்ணங்கள் அவர்களைப் பிரித்

செனட்சபை முதலிய பிரதிநிதி ஸ்தாபனங்களில் விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்பது மகாத்மா காட்டிய வழி. இப்போது செனட்சபைக்கு தென்னிலங்கையிலுள்ள ஒரு தாழ்த்தப்பட்டவரை நியமிக்க பிரதமர் டட்லிசேனநாயகா உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. பல இன்னல்களுக்கும் தமிழ் சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்டவரே உட்பட்டிருப்பதால் அவர்களில் சிலரையே செனட்சபைக்கு பிரதமர் நியமிப்பது பலவிதங்களிலும் பொருத்தமாகும். மகாத்மாவிடம் உண்மையான பக்தியும் விசுவாசமுமுள்ள இலங்கைப் பிரதமர் இவ்விதம் செய்யின், அது மகாத்மாவுக்குத் திருப்தியளிப்பதுடன், தமிழ் ஹரிஜனங்களின் விமோசனத்துக்கு உதவி, அவர்களது அபிமானத்தையும் அவர் பெறமுடிவதாக இருக்கும்.

# “தேசிய திரைக்குள் ஆபத்து மறைக்கப் பட்டுள்ளது”

வெள்ளவத்தை, திங்கள்

“தமிழ் அரசாங்க ஊழியர்களைச் சூழ்ந்துள்ள பேராபத்து ‘தேசிய’ திரையிட்டு மறைக்கப்பட்டிருக்கிறது. பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் பலிபீடத்தில் வீழ்ந்துவிட்டனர். நமது சங்கத்தின் ஆணி வேராகத் திகழ்ந்த திரு. க. பத்மநாதனைக்கூட நாம் பலிபீடம் ஏற்றிவிட்டோம்.”

இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் எட்டாவது ஆண்டறிக்கை கூறுகிறது. இவ்வறிக்கையில் ‘இடுக்கண் வருங்கால் நகுக” என்றார் தமிழ் மறை தந்த வள்ளுவர் நாமும் அப்படியே தான் சிரிக்கிறோம். அர்த்தமுள்ள சிரிப்பு, வெறும் பொருளற்ற ஏக்காளமல்ல, அடிமை வாழ்வைத் தகர்த்தெறிந்து சுதந்திரத்தை நிலைநாட்டத் துணிவு வேண்டும்; தியாகம் வேண்டும். இவை வெறுமனே வந்துவிடாது நிலைதளராநெறியும் நேரிய குறிக்கோளும் வேண்டும் என்று மேலும் கூறப்பட்டிருக்கின்றது.

## லண்டன் தமிழருக்கு நன்றி

தமிழ்ப்பேசும் அரசாங்க ஊழியர்களின் தலைவிதியை நிர்ணயிக்க வல்ல கோடீஸ்வரன் வழக்கு சம்பந்தமாகக் கடல் கடந்து வாழும் தமிழர்களும் உதவி செய்திருந்தார்கள் என்றும் குறிப்பாக லண்டன் வாழ் தமிழ்ப்பேசும் பெருமக்களுக்குத் தமது நன்றியும் கடப்பாடும் உரியது என்றும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது.

லண்டனில் வசிக்கும் ஈழத்தைச் சேர்ந்த திரு. சபாபதிப்பிள்ளை, திரு. சி. சிவசேகரம், லண்டன் தமிழ்ப்பட பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. மகரசிங்கம் ஆகியோருக்கும் ஏனைய தமிழர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காந்தி விழா சிரமதானம்

அராலி, திங்கள்

காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டி அராலி தெற்கு ஸ்ரீ முருகன் வாசிகசாலை உறுப்பினர் சிரமதான வேலையை ஆரம்பித்து வைத்தனர் இவர்கள் கிராமத்திலுள்ள பொதுக்கேணி கிணறுகளையும் ஆடுமாடு நீரருந்தும் நீர்த் தொட்டிகளையும் திருத்தியமைத்து ஆலய வீதிகளை புதர் பற்றைகளை நீக்கி சீர்ப்படுத்தும் வேலைகளாகக் கையாண்டு வருகிறார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திருத்தங்கள் செய்வது உசிதம் இம்முறை இங்கு நடந்த ஆசிரிய ஆலோசகர் வகுப்புகள் மெச்சக்கூடியது. ஆனால் இப்பேர்ப்பட்ட ஆலோசகர் வகுப்புக்களில் ஆலோசகர்களுக்கு படக்காட்சிகள் மூலமாகவும் உபந்நியாசங்கள் மூலமாகவும் உலகத்தின் கண்ணே பிரபல்ய சித்திரச் செல்வர்களின் படங்களைப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் அந்தப்படங்களை சித்திரத் திறமையை நுகர்ந்து அப்படங்களிலுள்ள ரசானுபவத்தை அனுபவிப்பது இந்த அனுபவத்தாலும் கலையின்பம் சுவைத்தாலும் தங்கள் உள்ளம் மலர்ந்து கலையாசிரியர்கள் விரிந்த மனப்

திரப் பொருட்களை அலங்காரத்துக்கு மாத்திரமல்ல ஒருவரின் சீவியத்தில் சாத்வீக தெய்வீக உணர்ச்சிகளை தூண்டுவதற்கும், அமைதியையும் சாந்தத்தையும் அளிப்பதற்கும் உபகரணங்களாகக் கருதப்பட்டு அமைக்கப்பட்டு வந்தன ஆகையினால் எங்கள் இல்லங்களும், மாடமாளிகைகளும், கோயில்களும் அமைக்கப்பட்ட சிற்ப ஓவிய முறைகளையும் அடிப்படை உருவ வடிவ அமைப்பையும் நாங்கள் மறக்கவும் கூடாது; கைவிடவும் கூடாது. இவர்களை எங்கள் கல்விக்கூடங்களிலும் ஓவியக்காட்சிகளிலும் ஓர் இடம்பெறச் செய்யவேண்டும். எமது

# நுவரெலியாக் கடிதம்

நுவரெலியா ஒரு நூதனமான இடம். விழாக்களும் விசேடங்களும் நடப்பதானல் அடுத்தடுத்து நடைபெறும். சித்திரை மாதத்தில் பரவசமூட்டும் பல்வேறு நிகழச்சிகள் இடம்பெற்ற பின்பு ஆவணி மாதம்வரை எந்த விதமான பிரதான நிகழ்ச்சிகளுமே நடைபெறவில்லை. ஆவணி மாதமும் காமினி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வி நூற்றாண்டுப் பொருட்காட்சியைத் தவிரக் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எதுவும் இடம்பெறவில்லை.

ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக நுவரெலியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாரதி விழாவும், காந்தி நூற்றாண்டுக் கொண்டாட்டமும் வெகு விமரிசையாக நடைபெற்றன. அவற்றுள் பூண்டுலோயா முத்தமிழ் மன்றத்தினர் கொண்டாடிய காந்தி நூற்றாண்டு விழா, தலவாக்கொல்லையில் நடைபெற்ற பாரதி விழா, லிண்டுலையில் எழுத்தாளர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் முதலியன சிறப்பாக அமைந்தன. பாரதி விழாவையொட்டி தலவாக்கொல்லை மாணவர்களிடையே மூன்று பிரிவுகளிலும் பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி முதலியவற்றை ஒழுங்குசெய்து வெற்றி பெற்றவர்களுக்குச் சிறந்த பரிசில்களும் வழங்கியுள்ளது பாராட்டிற்குரியது.

நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காகப் பொலிஸ் அலுவலகம் சென்றபோது நூற்றுக்கும் அதிகமான இளம் பெண்கள் பெண் பொலிஸ்காரரைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்காக வந்திருந்தனர். பாரதி விழாவைத் தொடர்ந்து தொழில் செய்து வாழவேண்டுமென்ற ஆசை படித்த மலையக மங்கையரின் உள்ளத்தில் எழுந்தது வரவேற்கத்தக்கது.

இம்மாதம் முதலாந் திகதி உத்தியோகபூர்வமாக நுவரெலியாவுக்கு வருகைபுரிந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா மூன்று நாட்கள் தங்கி நகரின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டார். நூரளைக்கு முதன் முதலாக வருகைதந்த அமைச்சருக்கு வர்த்தகர்களும், நுவரெலியாப் பெருமகககளும் பிரமாண்டமான வரவேற்பளித்தனர். நகரத்தில் செய்யவேண்டிய திருத்த வேலைகளோடு. புதிய நகர மண்டபம் அமைப்பது பற்றியும், நவீன சந்தை அமைப்பது பற்றியும் உள்ளூராட்சி அமைச்சர் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இரு வார நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல அமைந்தது ஸ்ரீமதி விஜயலக்ஷமி பண்டிட்டின் நூரளை விஜயமும், பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் இடம்பெற்ற காந்தி விழாவும்.

4ந்திகதி நுவரெலியா பரிசுத்த திரித்துவக்கல்லூரியில் காந்திஜி நினைவு நூல்நிலையத்தை ஸ்ரீமதி விஜயலக்ஷமி பண்டிட் குத்துவிளக்கேற்றி திறந்துவைத்தார். அதைத் தொடர்ந்து நுவரெலியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. டொனல்ட் ரணவீர தலைமையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு பி. எம். விஜயக்கோன், வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆர் தியாகராசா, வழக்கறிஞர் விஜயசுந்தரம், திரு. எஸ். தொண்டமான் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

# நவம்பரில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருந்த நாவலர் நூல் கண்காட்சியும், நாவலர் விழா திரைப்பட, புகைப்படக் காட்சியும் அடுத்தமாதம் 29-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற நாவலர் சபைக்கூட்ட முடிவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது

டிசம்பர் 5-ம் திகதி நாவலர் தினத்தன்று நாவலர் முத்திரை வெளியிடப்படுவதால் கடந்த வருடம்போல இவ்வருடம் நாடு முழுவதும் நாவலர் வாரம்கொண்டாடவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. நவம்பர் 29-ம் திகதியிலிருந்து டிசம்பர் 5-ம் திகதிவரை நாவலர் வாரம் அனுஷ்டிக்கப்படும்

நல்லூரில் நாவலர் சிலையுள்ள மண்டபத்தில் 65 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்படும் நூலகத்தின் ரூ. 40,000 வேலைகள் முடிந்துவிட்டதாகவும் நாவலர் சபைச்செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா இங்கு தெரிவித்தார்

‘நாவலன்’ என்ற பெயரில் மேற்படி சபை வெளியிடவிருக்கும் மாதப் பத்திரிகையும் இம்மாதம் 20-ம் திகதி வெளியிட்டுவைக்கப் படவிருக்கின்றது (கா நி)

# மோதகப் பூசை நடந்ததும் திடீரென மழை பெய்தது

மட்டுவில், ஞாயிறு

வில்லைவேலி விவசாயிகள் நலன்பேணு சங்கத்தின் ஆதரவில், மழையின்றி பயிர் வாடுவதைக் கண்டு வில்லைவேலி மருதடி விநாயகன் அருளால் மழை பெய்ய வேண்டும் என வேண்டி மோதகப்பூசை நடத்தினர். இதில் இப் பகுதியிலுள்ள சகல விவசாயிகளும் கலந்துகொண்டு மோதகம் அவித்துப் படையல் செய்தனர். இத்துடன் பிரதி ஞாயிறு தோறும் இப் பூசையைச் செய்வதென்றும், வில்லைவேலி விவசாயிகள் நலன் பேணு சங்கம் தீர்மானித்துள்ளது மோதகப் படையல் நடைபெற்றதும் திடீரென மழை பெய்தது இதுகண்ட விவசாயிகள் ஆனந்தக்கண்ணீர் பொழிந்தனர்.

மோதகப்பூசையை தொடர்ந்து நடத்த கூட்டத்தில் திரு. மயில்வாகனம் பேசியதாவது ‘மேல் நாடுகளிலும் நகர்புறங்களிலும் மக்கள் விஞ்ஞானத்தை நம்பி வாழ்வது ஏதோ உண்மைதான் ஆனால் எம்போன்ற கிராமப் புறங்களில் வாழும் ஏழை விவசாயிகளுக்கு, எமது வயல் வெளிகளைச் சுற்றியுள்ள ஆலயங்களேதான்துணை புரியும். ‘கடவுளை நம்பியவர் கைவிடபப்படமாட்டார்’ என்ற அனுபவரீதியான உண்மையையும், ஆண்டவன்பால் நெக்குருகி கண்ணீர்விட்டு வேண்டினால் அடியவர்வேண்டும் அத்தனை கோரிக்கைகளையும் கொடுப்பார் என்பதை நான் கூற வேண்டியதில்லை, இன்றைய நிகழ்ச்சி எடுத்துரைக்கும்.

அடுத்த ஞாயிறு திரு. சடையர் வேலுப்பிள்ளை தன்னுடைய மோதக பூசை உபயத்தை செய்வதாக ஒப்புக்கொண்டார். அடுத்து மாரிமுத்து சின்னத்துரை உட்பட பலர் செய்வதாக ஒப்புக்கொண்டனர். இன்றைய உபயகாரர் திரு. மே. ரி: பாலசிங்கம் நன்றி கூறி பிரசாதம் வழங்கினர்.

## முதியவரின் நல் முயற்சி

வேலணை, திகங்ள்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கென ஒருதீர்த்தக்கேணி வேலணை சாட்டியில் நிர்மாணிக்கப்படுகிறது இக்கேணி வெட்டும் முயற்சியை 80 வயதுடைய வைத்திலிங்கம் என்பவர் வேறு எவருடைய உதவியுமின்றி தனது தனித்த முயற்சியில் செய்து வருகிறார்.

இப்பொழுது கேணிவெட்டும் வேலை பூர்த்தியடைந்துள்ளது. வெகு விரைவில் தொடர்ந்து கேணிக்கரைக் கட்டுவேலைநடைபெறவிருக்கிறது.

## பஸ் விட சம்மதம்

மல்லாகம், திங்கள்

இ.போ. ச. யாழ்மாவட்ட பிரதேச முகாமையாளருடன் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் நேரில் சந்தித்து குரும்பசிட்டி யாழ்ப்பாணம் பஸ் சேவைசீர்கேடு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். புதிய பஸ் ஒன்றினை விரைவில்சேவைக்குஉபயோகிக்க முகாமையாளர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

வியப்பாக இருந்தது. அந்த விவரப்படி மருந்தைச் செய்து போட்டதில் அப்பையன் இரண்டு நாளில் பெரிதும் குணமடைந்து விட்டதைப் பார்த்தேன்.

0 0 0

பின்னர் கென்னடியின் ஆவி வந்து பேசுவதைக் கூறினர். தமிழிலேயே அவர் பேசினார்.

“இவ்வுலகில் இருக்கையில் தங்களுக்குத் தமிழ் தெரியாதே. இப்போது எப்படி நல்ல தமிழில் பேசுகிறீர்கள்” என்று கேட்டேன். ஆவி உலகத்துக்கு வந்ததும் எல்லா மொழிகளும் தானாகத் தெரிவதாயும் தூரம், மொழி முதலிய தடைகள் இல்லை என்றும் பதிலளித்தார்

இறைவனுடன் கலந்துவிட்ட பெரியோர்கள், பேசமாட்டார்கள் என்று அப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்கூறி, அதற்கான விளக்கம் கேட்டேன். அமரர் கென்னடி மூலம் அதற்கு கிடைத்த பதிலை இதோ தருகிறேன்:-

## பருக் மரைக்காயர் விருப்பம்

காஞ்சீபுரம், அக். 6

“இப்பொழுது டெல்லியிடம் அதிகாரம் குவிந்து இருப்பதால் மாநிலங்கள் டெல்லியிடம் அதிகாரம் கேட்க கேண்டிய நிலையில் இருக்கின்றன இந்தநிலைமாறி மாநிலங்களுக்கும் நகரசபைகளுக்கும் அதிக அதிகாரம் இருக்கும் நிலை வரவேண்டும்” இவ்வாறு பாண்டிச்சேரி முதல் மந்திரி திரு பருக் மரைக்காயர் காஞ்சீபுரம் நகரசபை சார்பில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினார். சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் திரு சுந்தரவடிவேலும் இவ்விழாவில் கலந்துரையாற்றினார்.

## பிரதமருக்கு நன்றி

பதுளை, திங்கள்

திரு சி. ரி. கொத்தலாவலையை இலங்கையின் ரஷ்ய தூதுவராக நியமித்ததற்காக பிரதமருக்குபதுளை மாநகரசபை நன்றி தெரிவித்துள்ளது.

திரு கொத்தலாவலை ஊவா மாகாணத்தின் பெருமகன் என்றும் அவர் இம்மாகாணத்தின் சாதாரண மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பெருந்தொண்டாற்றியவர் என்றும் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

0 0 0

தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்கினுஞ் தொண்டர் தருகிலால், பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்ப் பாடுமின் புலவீர்காள், இம்மையே தரும் சோறும்கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம், அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.

— சுந்தரமூர்த்திசுவாமிகள்.

## ஆராய்ச்சி நிலையம்

பருத்தித்துறை, திங்கள்

உயிரியல், நீரியல் ஆராய்ச்சிக்கென அண்மையில் அமைக்கப்படவிருக்கும் கட்டடத்திற்கு ரூபா 30,000 செலவாகலாமென உத்தேசத்திட்டத்தின் படி தெரிய வருகிறது. இக்கட்டடத்திற்கான நூல்கள் எந்திர உபகரணங்களை ஆசியா பவுண்டேசன் ஸ்தாபனம் அளிக்க முன் வந்துள்ளதாக வட பகுதி விஞ்ஞானக்கல்வியதிகாரி திரு. எம் அற்புதநாதன் கூறினர்.

## தலைவராகத்தெரிவு

சங்கானை, திங்கள்

நாவலர் ப. நோ. கூ. சங்க வருடாந்தக்கூட்டம் நடைபெற்றபோது திரு. பரம் தில்லைராஜா தொடர்ந்து ஐந்தாவது முறையாக தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

## காணி வழங்க தடை உத்தரவு

அல்லைப்பிட்டி திங்கள்

வேலணைக்கிராமசபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கென வேலணை அராலி வெளியில் தென்னைப் பயிர்ச் செய்கைக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த காணியை கொடுக்க வேண்டாமென வடமாகாண அரசாங்க அதிபர் தீவுப்பகுதி காரியாதிகாரிக்கு அறிவித்துள்ளாராம்.

......

## இருந்த கிணறும் வற்றிவிட்டது

பச்சிலைப்பள்ளி, திங்கள்

“செம்பியன்பற்றுறோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு குடி நீர் கிணறு இல்லாததால் அயல் வீடுகளிலுள்ள கிணறுகளிலேயேகுடிநீருக்காகச்செல்ல வேண்டியுள்ளது. அயல் வீட்டுக்கிணறுகளும் நீர் வற்றிவிட்டதினால் பாடசாலை மாணவர்கள் குடிநீருக்கு கஷ்டம் அடைகின்றனர்’. எனப்புகார் கூறப்படுகிறது’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org